# கீதாசார்யன் 514

**கர்மண்யேவாதிகாரஸ்தே மா ஃபலேஷு கதாசன**





**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள்தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

| | | |
|---|---|---|
| ஆண்டு 43 | நம்மாழ்வார் ஆண்டு 5121 பிலவ ஆடி (ஜூலை 2021) | இதழ் 10 |


## திருக்கோயில்கள் தரிசனம்

சென்ற இதழில் திருக்கோயில்களுக்குள் பக்தர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் நோயின் தாக்கத்தினால் வருந்திக் கிடப்பவர்கள் மனச்சாந்தி பெறுவதற்குக் கோயில்களில் வந்து தரிசனம் செய்வதற்கு உடனே வழி வகுக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தோம். எம்பெருமானுடைய அருளால் திருக்கோயில்களும் பொதுமக்களின் வழிபாட்டிற்காகத் திறக்கப்பட்டு, நோயின் தாக்கமும் குறைந்து வருகின்றது.

பெருந்தொற்று நோயின் தாக்கம் சற்றுக் குறைந்திருந்தாலும், அது மூன்றாம் அலையாக மீண்டும் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று கூறுகிறார்கள். அதனால் தான் திருக்கோயில் திருவிழாக்கள், திருவீதிப் புறப்பாடுகள் முதலியன தொடங்கப் பெறவில்லை என்றும் கூறப்படுகிறது.

திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களும் மிகவும் கவனத்துடன் அரசாங்கம் வகுக்கும் நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். முகக்கவசங்களைச் சரியாக அணிதல், இடைவெளிவிட்டு இருத்தல் முதலியவற்றைத் திருக்கோயில்களுக்குச் செல்பவரும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். நம்மால் பிறருக்கோ அல்லது பிறரால் நமக்கோ எந்தத் தொற்றும் ஏற்படுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. கவனக் குறைவாக இருந்தால் மூன்றாம் அலை ஏற்பட்டு மீண்டும் திருக்கோயில்களை மூடுவதற்கு இடமளித்துவிடும். ஏற்கெனவே ஒரு வருடத்திற்கும் மேலாக உற்சவங்கள் முதலியன தடைபட்டிருக்கும்போது அது மீண்டும் தொடருவதற்கு நாமே வாய்ப்பளித்து விடாமல் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

# கீதாசார்யன் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | வைணவ ஆசார்யர்களின் வாழ்வும் வாக்கும் | ரூ. 600 |
| 2. | இயற்பா வியாக்கியானம் (நம்பிள்ளைபடி) | ரூ. 400 |
| 3. | ரகசியக்ரந்தங்கள் மூலம் (கையடக்கப்பதிப்பு) | ரூ. 120 |
| 4. | ஸ்ரீவைஷ்ணவ முத்துக்கள் (முதல் பகுதி) | ரூ. 200 |
| 5. | ஸ்ரீவைஷ்ணவ முத்துக்கள் (இரண்டாம் பகுதி) | ரூ. 200 |
| 6. | வெண்ணெய்க்காடும் பிள்ளை | ரூ. 100 |
| 7. | ஸ்ரீமத்பகவத்கீதை (தெளிவுரை) | ரூ. 100 |
| 8. | ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை | ரூ. 100 |
| 9. | ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரம் (மும்மதவிளக்கம்) | ரூ. 500 |
| 10. | ஆழ்வார்கள் யாவர்? | ரூ. 100 |
| 11. | ஸ்ரீவைஷ்ணவம் (ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமி எழுதியது) | ரூ. 100 |
| 12. | சாளக்கிராமங்களின் சிறப்பு, திருமண்காப்பின் பெருமை | ரூ. 100 |

மேற்கண்ட புத்தகங்கள் அனைத்தையும் சேர்த்து வாங்குபவர்களுக்கு ரூ. 2000க்கு இப்புத்தகங்கள் வழங்கப்பெறும் (தபால் செலவு தனி).

**கீதாசார்யன்** பத்திரிகைக்குச் செலுத்தியுள்ள சந்தா முடிவடைந்த உடன், சந்தா முடிவடைவது பற்றித் தனித் தபாலில் தெரிவிக்கப்படும். உடனடியாகச் சந்தா செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளாதவர்களுக்கு அடுத்த இதழ் அனுப்பப்படமாட்டாது. சந்தா செலுத்துபவர்கள் பின்கண்ட வங்கியின் (எந்த ஊரிலும்) எந்தக் கிளையிலும் கீதாசார்யன் சந்தா செலுத்தலாம்:

**Account in the Name of GEETHACHARYAN**

**Punjab National Bank A/c No. 0346002100022891 IFSC : PUN0034600**

மேற்கண்ட வங்கிகளில் சந்தா செலுத்திய விவரத்தை, கீதாசார்யன் அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமாகவோ, SMS, கடிதம், geethacharyan@yahoo.com க்கு E-mail மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். தொலைபேசி எண் : **9444911192** (காலை 10 மணிமுதல் இரவு 8 மணி வரை மட்டும். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.) மணியார்டர்/டி.டி./ உள்ளூர் காசோலைகள் மூலமும் சந்தா செலுத்தலாம்.


## கீதாசார்யன்

**E-mail: geethacharyan@yahoo.com**

ஆலோசகர் குழுத் தலைவர்

**T.C.A. ராமானுஜம்** M.A.B.L. I.R.S (Retd.)

ஆசிரியர்

**Dr. M.A.வேங்கடகிருஷ்ணன்** M.A., M.Phil., Ph.D., D.Litt.

துணை ஆசிரியர்

**M.A. மதுசூதனன்** (M.C.A.,M.A(Skt.),M.A(Vaishnavism)

## கீதாசார்யன்

**7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி,**

**சென்னை 600005**

**மூன்று வருடச் சந்தா ரூ. 500**

**ஆயுள் சந்தா ரூ. 2500**

# அண்ணா ஸ்வாமி உபந்யாஸமாலை

*ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்*

## அண்ணங்கராசார்ய ஸ்வாமி

### ஸ்ரீவசனபூஷண நல்வார்த்தை

ஸ்ரீவசனபூஷண திவ்யசாஸ்தரத்தில் பொதிந்துள்ள நல்வார்த்தைகளில் இது வொன்று மிகச் சிறந்தது:

"குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்கவேணும்" என்பதாம்.

ஆர் வசனபூடணத்தின் ஆழ்பொருளெல்லாமறிவார்? ஆரது சொல் நேரில் அனுட்டிப்பார்? என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்தவாறு இந்த நல்வார்த்தையின் படி அனுட்டிக்கவல்ல அதிகாரி இம்மண்ணுலகில் ஒருவருமிலரேயானாலும் ஸ்ரீஸூக்தியின் பொருளை ஒருவாறு அறிந்திருத்தல் அழகியதன்றோ! கேண்மின்;



நமக்குச் சிலர் குற்றம் செய்தால் அவர்கள் திறத்திலே நாம் பொறுமை காட்ட வேணும்; க்ருபை பண்ணவேணும்; சிரித்திருக்கவேணும்; உகந்திருக்கவேணும்; உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்.

**1.** அவர்கள் செய்த குற்றத்திற்கு நாம் ஒருபதில் தீங்கு செய்யவாவது, 'இப்படி நமக்குக் குற்றஞ்செய்தானே!' என்று நெஞ்சு கன்றியிருக்கவாவது கூடாது. இதுவே பொறுமையாகும்.

**2.** பாகவதாபராதிகளை எம்பெருமான் அவசியம் தண்டித்தே தீர்வனாதலால் 'ஐயோ! நாம் பொறுத்திருந்தாலும் இவர்களை எம்பெருமான் தகுந்தபடி தண்டிக்கப் போகிறானே! இதற்கு என்ன பண்ணுவோம்!' என்று இரங்கியிருக்க வேணும். இதுவே க்ருபை பண்ணுவதாம.

**3.** ஒருவர் நமக்குத் தீங்கிழைப்பதாவது என்ன? நம்மிடத்தில் பலபல கு ற்றங் குறைகள் இருப்பதாக எடுத்துக்கூறி நம்மை தூஷிப்பதாம். இங்ஙனம் தூஷிப்பதனால் நமக்கு என்ன கேடு விளைந்திடுமென்பதை நாம் சிறிது ஆலோசிக்கவேணும். இஹலோகத்தில் கெடுதி, பரலோகத்தில் கெடுதி என்று ஹாநியானது இருவகைப்படும். இவ்விருவகைக் கெடுதிகளுள் பரலோகத்துக் கெடுதி யாதொன்றும் இவர்களால் விளைக்க முடியாதென்பது திண்ணம்.

இஹலோகக் கெடுதி ஏதேனும் விளைக்க முடியும். அதாவது, யாரேனும் நமக்கு ஏதேனும் த்ரவ்யலாபம் உண்டுபண்ண நினைத்திருந்தால் அதை இவர்கள் தூஷணாதிமுகத்தாலே தடை செய்ய முடியம். அப்படிப்பட்ட இஹ லோக விரோதங்களைச் செய்தால் உண்மையில். தொலைய வேண்டியதுதான் தொலைந்தது என்று உள்ளம் பூரிக்க வேண்டு மேயல்லது இழவுக்கு வருந்தவேண்டிய அவசியமில்லாமையால், "ஐயோ! இவர்கள் செய்த கெடுதியை நாம் ஒரு ஹாநியாக நினைத்து நாமும் தங்களைப்போலே வருத்தப்படுவோமென்று இவர்கள் நினைத்திருக்கிறார்களே! இப்படியும் ஒரு மூடபுத்தி இவர்களுக்கு இருக்குமோ?" என்று சிரித்தருக்கவேண்டும்.

4. நமக்குத் திங்கிழைக்குமவர்கள் நம்முடைய தேஹத்திற்கு ஏதேனும் பரிபவம் பண்ணலாமே தவிர ஆத்மாவுக்கு ஒரு பரிபவமும் பண்ண முடியாதன்றோ; அப்படி அவர்கள் பண்ணும் பரிபவங்களுக்கு இலக்கான ஸ்வசரீரத்தைத் தனக்கு சத்ருவாக நினைத்திருக்க வேண்டியவனாகையாலே தன்னுடைய சத்ருவிஷயமாக இவன் பரிபவம் பண்ணும்போது தான் உகக்குமாபோலே உகந்திருக்கவேணும்: தவிரவும், இவர்கள் ஹானிபண்ணும் த்ருஷ்ட பதார்த்தங்கள் தனக்கு ப்ரதிகூலங்களென்று நினைத்திருக்க வேண்டியவனாகையாலே, தனக்கு ப்ரதிகூலங்களானவற்றைத் தவிர்க்கும்போது தான் உகக்குமாபோலே உகந்திருக்கவேணும்.

5. நம்முடைய தோஷங்களை நாம் அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டேயிருக்க வேணும். இப்படியிருந்தும் நாம் நம்மமுடைய தோஷங்களை மறந்திருக்கிறோம்; அப்படிப் பட்ட நிலைமையிலே அவற்றை நமக்கு நினைப்பூட்டி இவர்கள் நமக்குப் பண்ணுமுபகாரம் என்னே! என்னே! என்று பெருநன்றி பாராட்டவேணும்.

இந்த ஐந்துக்குள்ளே ஏதேனும் ஒன்று வாய்த்தாலும் போதும். ஐந்தும் வாய்த்துவிட்டால் மூவுலகும் வென்றதாம்.


## திவ்யப்ரபந்தம் M.A. பட்டப்படிப்பு (தபால் கல்வி)

தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள தொலைதூரக் கல்வி மையம் மூலம் M.A. திவ்யப்பிரபந்தம் என்ற பட்டப்படிப்பு நடைபெற்று வருகிறது. திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள் மற்றும் மூவாயிரத்தில் முக்கியமான பாசுரங்கள் ஆகியவற்றின் விளக்கங்கள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும் M.A. மற்றும் Diplomo ஸம்ஸ்க்ருத வகுப்புகளும் நடத்தப் பெறுகின்றன, (அவரவர்கள் வீட்டிலிருந்தபடியே இந்த வகுப்புகளில் சேர்ந்து படிக்கலாம்) இவ்வகுப்புகளில் சேருவதற்கு B.A., B.Sc., B.Com, B.E. அல்லது B.Litt. போன்ற ஏதாவதொரு இளங்கலை (Bachelor Degree) படித்திருக்க வேண்டும். வயது வரம்பு இல்லை. சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தின் இணையதளத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு sastramadp@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

# உதகஶாந்தியின் உட்பொருள்

**ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ரஸாஹிதீவல்லப**

**கருணாகராசார்யஸ்வாமி**

அடுத்து உதகசாந்தித் தொகுப்பில் பதினாறாவது அனுவாகத்தின் ஐந்தாவது மந்திரம்.

முன்பே நாம் கூறிய படி தைத்திரீயஸம்ஹிதையில் ஐந்தாம் காண்டம் ஐந்தாம் ப்ரச்னத்தில் பத்தாவது அனுவாகத்தின் முதல் பகுதியை எடுத்து ஸ்ரீபோதாயன பகவான் உதகசாந்தியின் பதினாறாவது அனுவாகமாக அமைத்திருக்கிறார்.

எனவே அங்கு உள்ள ஐந்தாவது மந்திரமே உதகசாந்தித் தொகுப்பில் பதினாறாவது அனுவாகத்தின் ஐந்தாவது மந்திரம் என்பது தெளிவு.

ஐந்தாவதான அம் மந்திரத்தின் .முழு வடிவம்

5.அதிபத்நீ நாமாஸி ப்ருஹதீ திக் தஸ்யாசஸ்தே ப்ருஹஸ்பதிரதிபதிச் ச்வித்ரோ ரக்ஷிதா யச்சாதிபதிர்யச்ச கோப்தா தாப்யாம் நமஸ்தௌ நோ ம்ருடயதாந்தே யம் த்விஷ்மோ யச்ச நோ த்வேஷ்டி தம் வாம் ஜம்பே ததாமி. என்பதாகும்.

கிழக்கில் நின்று முதலாவது மந்திரத்தைச் சொல்லி அக்னியின் கிழக்குப் பகுதியில் முதல் ஹோமத்தைச் செய்து விட்டு, வேள்வி செய்யும் ஹோமமேடையில் திகழும் அக்னியை வலமாக வந்து, தெற்கில் இரண்டாவது மந்திரத்தைக் சொல்லி இரண்டாவது ஹோமத்தைச் செய்து, ஹோமமேடையில் திகழும் அக்னியை வலமாக வந்து, மேற்கிலே மூன்றாவது மந்திரத்தைச் சொல்லி ஹோமம் செய்து, வேள்வி செய்யும் ஹோமமேடையில் திகழும் அக்னியை வலமாக வந்து, பிறகு வடக்கிலே நின்று, நான்காவது மந்திரத்தைச் சொல்லி ஹோமம் செய்து, ஹோமமேடையில் திகழும் அக்னியை வலமாக வந்து, கிழக்கேயே நோக்கி நின்று இந்த ஐந்தாவது மந்திரத்தைச் சொல்லி அக்னியின் மையப் பகுதியில் ஹோமம் செய்திட வேண்டும்.

இந்த மந்திரத்தை உதகசாந்தி ஜபத்திலே பயன் படுத்துபவர்களைப் பொறுத்த மட்டில் வேள்வியிலே இந்த மந்திரங்களின் பயன் பாடு பற்றிய மேற்படி விவரணம் ஒரு கூடுதலான தகவல்தான். அது மந்திரங்களின் பொருளையும் மேன்மையையும் சுவைக்க வாய்ப்பான பின்னணியைத் தரும் என்றும் சொல்லி இருக்கிறோம்.

இனி உதகசாந்தி ஜபம் செய்கையில் இம் மந்திரத்தின் பொருளைப் பரமைகாந்திகளான நாம் எப்படி அனுபவித்து இன்புற வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

யாரேனும் ஒரு புதிய வாசகர் இந்தத் தொடரில் ஆசை வந்து இந்த இதழினை மட்டுமே படிக்க நேர்ந்தால் அவருக்கு இது புதிராக இருக்கக் கூடாதே என்ற அக்கரையில் தான், ஒவ்வொரு மந்திரத்தைத் தொடங்கும் போது முன் போலவே என்று சொல்லாது இந்த முன் வரலாற்றுப் பகுதியைக் கணினியின் கருணையாலே ஒட்டி வைத்தே மேலே எழுதி வருகிறேன். கீதாசார்யன் ஆசிரியரும் அப்படியே அதை முந்திய நான்கு மந்திரங்களின் விளக்கங்களிலும் அச்சிட்டு அருளிவருகிறார்.

நான்கு திசைகளுக்கும் உரியவராகவும் பாதுகாவலராகவும் வெவ்வேறு தேவதைளை வேதம் சொல்வதாகக் கொண்டு வேதபாஷ்யகாரப் பெருந்தகைகள் விளக்கம் அளித்துப் போந்தார்கள்.

எம்பெருமானார் தர்சனத்திலே இருக்கும் பெரியோர்கள் சிலர் அந்த வெவ்வேறு தேவதைகளின் உள்ளே உறையும் எம்பெருமானையே அந்த மந்திரங்கள் பரவிடுவதாகப் புரிந்து கொள்ளலாம் என்று ஓர் எளிய வழியை ஏற்பார்கள்.அவர்கள் இந்த மந்திரங்களில் சொல்லப் படும் பல வேறு தேவதைகளையும் பாம்புகளையும் முதலில் நினைவில் கொண்டு வந்து, கொள்ள வேண்டும். அதாவது புறத்திலே உள்ளவர்களான சிலரை முதலில் த்யானம் செய்து கொள்ள வேண்டும். பிறகு அவர்களின் அகத்திலே-உள்ளே அந்தர்யாமியாக உள்ள பெருமாளை எண்ணிக் கொண்டு ஹோமத்தைச் செய்திட வேண்டும்.

சேற்றைப் பூசிக்கொண்டு அதை அலம்புவது போன்ற இந்த முறை எதற்கு?

இதனால் நமது புறந்தொழா நிலையில் ஓரளவு குறை வருகின்றதோ? என்ற அச்சமும் வருகிறதே!

எனவே ஆங்காங்கு உள்ள வேதச் சொற்களை எல்லாம் வெவ்வேறு திவ்ய தேசத்திலே காட்சி தரும் எம்பெருமானையே கூறுவதாகக் கொள்ளும் வழியிலே பயணம் செய்து வேவ்வேறு திவ்யதேசத்திலே எம்பெருமான் வெளிக்காட்டும் குணங்களை அச்சொற்கள் மூலம் அனுபவித்திடலாமே!

இப்படி உதகசாந்தி ஜபமும் அருளிச் செயலைப் போல பகவத் குணானுபவம் ஆகவே அமையட்டும் என்று விழையும் உபயவேதாந்திகளான பரமைகாந்திகளுக்கு ஏற்றவகையில் வேதத்தையே வேதத்தாழ்வானாக்கி அனுபவித்திட வகையாக உதகசாந்தியின் உட்பொருள் என்ற இத்தொடரை அடியேன் மூலம் கீதாசார்யன் அமைத்து கீதாசார்யன் மூலமே வெளியிட்டும் வருகிறான்.

“இது தெரிந்த விஷயம் தானே. பல முறை நீயும் சொல்லி வருவது.தானே. இப்பொழுது ஏன் இந்த நின்னைவூட்டல்?” எனச் சிலர் எண்ணலாம். அவர்கள் இந்த மந்திரத்திலே அடியேனுக்கு ஏற்பட்ட இடரையும் அதை என் துணை என்று நாலுகவிப்பெருமாள் மங்களாசாஸனம் செய்தருளியபடியே என் துணையாகவே திகழ்கின்ற கீதாசார்யன் ஆகிய பார்த்தஸாரதி எம்பெருமான் அகற்றி அருளியதையும் அதை கீதாசார்யன் இதழிலே வெளியிட்டருள்வதையும் ரஸிப்பதற்காகவே இந்த நினைவூட்டல்..

இதுவரை நாம் அனுபவித்த இவ்வனுவாகத்தின் நான்கு மந்திரங்களிலும் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்று நான்கு திசைகளைச் சிறப்பித்து வந்த வேதத்தாழ்வான் இப்பொழுது ஐந்தாவதாக மேல் (மேற்குத் திசை அல்ல. வானைக் குறித்துச் சொல்லுகையில் பயன்படுத்தும் சொல் இது.) திசையினைக் குறித்துச் சொல்கிறான்.

இப்பொழுது இந்த மேல் திசையில் உள்ள திவ்யதேசம் எது? என்ற கேள்வி எழுகிறது. ஏன் பரமபதம் அதாவது திருநாடு இல்லையா? எனலாம். ஆனால் அங்குச் சென்று மங்களாசாஸனம் செய்து அந்த திவ்ய தேசத்தை அனுபவித்து மீண்டு வந்து வருணித்து அனுபவிப்பவர் தான் யார்?

எனவே நாம் சென்று மங்களாசஸனம் செய்து அனுபவித்துப் பேசவல்ல நூற்றாறு திவ்யதேசங்களுள் ஒரு திவ்ய தேசத்தை இந்த மேல் திசைக்கு உரியதாகப் புரிந்து கொண்டால் நல்ல அனுபவம் கிட்டுமே என்று எண்ணிக் கொண்டேன்,

அது எந்த திவ்யதேசம்.? திருக்குடந்தையே.! அது எப்படி?

தஹரவித்யை என்கின்ற ப்ரஹ்மவித்யையைச் சாந்தோக்ய உபநிஷத் தனது எட்டாவது அத்யாயத்தில் ஏழு கண்டங்களிலே மிக விரிவாக விளக்கிடுகிறது. பக்தியோகம் செய்யும்

ஜீவாத்மா தனது அனைத்துக் கருமங்களையும் வினைகளையும்- கழிக்கும் இறுதிப் பிறவியிலே தன் உடலில் இருந்து வெளியேறுவது பற்றிய தகவலை ஏழாவது கண்டத்தின் நிறைவிலே தருகின்றது.

(மோக்ஷம் பெற தஹர வித்யை போன்ற ஏதேனும் ஒரு ப்ரஹ்ம வித்யையைத் தேர்ந்தெடுத்து பக்தியோகம் பயிலும் அனைத்து ஜீவாத்மக்களும் இப்படியே தான் இறுதிப் பிறவியிலே உடம்பை விட்டு வெளியேறுவர் என்பதையும் இங்கே நினைவிலே கொள்ள வேண்டும்).

உடலில் இதயத்தில் நூற்று ஓர் நாடிகள் உள்ளன. அவைகளில் தலைப் பக்கம் சேர்ந்துள்ள நடுநாடி என்கின்ற ஓர் நாடியின் வழியாக் தலையைப் பிளந்து கொண்டு ஜீவாத்மா வெளியேறிடுவான். அப்படி வெளியேறும் ஜீவாத்மா கதிரவனின் கிரணத்தைப் பற்றிக் கொண்டு மேலே ஏறிக், கதிரவனுடைய மண்டலத்தைப் பிளந்து கொண்டு சென்று அம்ருதத் தன்மையை அதாவது மோக்ஷ வாழ்வை அடைவான். மற்றைய நாடிகள் மூலம் வெளியேறிடும் ஜீவாத்மாக்கள் வேறு கதிகளை அடைவார்கள் என்று இங்கே சொல்லப் படுகின்றது.

அங்கு மூலத்திலே உள்ள ச்லோகம்

சதம் சைகா ஹ்ருதயஸ்ய நாட்ய: தாஸாம் மூர்த்தானம் அபி நிஸ்ஸ்ருதைகா

தயோர்த்த்வமாயந் அம்ருதத்வமைதி விஷ்வங்ஙன்யா உத்க்ரமணே பவந்தி

இதே ச்லோகம் கடோபநிஷத்திலும் ஓதப் படுகின்றது.

ப்ரபத்தி செய்து மோக்ஷம் போகின்றவர்களும் அப்படியே உடலை விட்டு நடுநாடி வழியாகவே வெளியேறிடுவார்கள். பக்தியோகத்தாலே மோக்ஷம் செல்பவர்கள் ப்ரபத்தியினாலே மோக்ஷம் செல்பவர்கள் ஆகிய இருவகை ஜீவாத்மாக்களுக்கும் அவர்கள் இதயத்திலே குடிகொண்டிருப்பதால் ஹார்த்தன் என்ற திருநாமத்தால் போற்றப்படும் எம்பெருமான் தான் தன் அருளால் அவர்களுடைய ஆத்மாக்கள் நடு நாடி வழியாக வெளியேறும் படிச் செய்கிறான்.

ஸ்ரீநடாதூர் அம்மாள் தம்முடைய பரமார்த்தச்லோகத்வயத்தில் ப்ரபன்னர்களுக்கும் உள்ள இந்த நடு நாடி வழியான வெளியேறுதலை

ந்யாஸாதேவ நிரங்குசேச்வர-தயா- நிர்லூன-மாயான்வய:

ஹார்த்தானுக்ரஹ-லப்த-மத்ய-தமனி-த்வாரா-பஹிர்-நிர்கத:

என்று வருணித்து அருளிச் செய்துள்ளார்.

ப்ரபன்ன-ஜன-ஸந்தான- கூடஸ்தரான நம்மாழ்வாரை நோக்கி ‘‘உமக்கு மோக்ஷம் தருகிறேன் வாரும்’’ எனத் திருமாலிருஞ்சோலை மணவாளன் அறிவிப்பு செய்தான்.

இதனைக் கேட்ட ஆழ்வார் அனைத்து ப்ரபன்னர்களக்கும் அருள் செய்வது போலத் தன் ஆத்மாவையும் நடு நாடி வழியாக உடம்பிலிருந்து வெளியேற்றித் தன்னையும் கதிரோன் மண்டலத்தினைப் பிளக்கச் செய்வித்து அர்ச்சிராதி வழியாக அழைத்துச் செல்வார் அழகர் என்று எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் அழகரோ அவரை அந்த உடலுடனேயே அழைத்துச் செல்ல வேண்டும் என்று பிடிவாதத்துடனே இருந்தார்..

‘‘எல்லோரையும் போல அடியேனையும் மோக்ஷத்துக்கு அழைத்துச் செல்லாமல் இந்த உடலனுடனேயே மோக்ஷம் அழைத்துச் செல்ல விரும்பும் உடம்பன் நீ என்பதனை ஊர் உலகுக்கெல்லாம் பறை சாற்றிடுவேன்’’ என்றெல்லாம் போராடி ஆழ்வார் அழகரை வழிக்குக் கொண்டு வந்துவிட்டார் செஞ்சொற்கவிகாளில். இப்படித் தன்னுடைய உடம்பிலே கூட இவ்வளவு அன்பு வைத்திருந்தும் தான் வேண்டிய பொழுதே மோக்ஷம் தராது தாமதம் ஏன்

செய்தான் எம்பெருமான் என்ற கேள்வியை எழுப்பி அவன் திருவுள்ளப்படி அவன் செய்து உகந்திட வல்லவன் அவன் என்ற தமது உணர்வினைத் திருமாலிருஞ்சோலையில் பதிவு செய்து பாடி அருளினார்.

அப்பொழுது அவன் ஆழ்வாருக்கு அர்ச்சிராதிகதியில் நடக்கப் போகும் உபசாரங்களை உருவெளிக் காட்சியாக்கி ஆழ்வாரும் அதனைக் கண்டு மகிழ்ந்து வருணிப்பது போன்ற நிலையை ஏற்படுத்தி அருளினான் சூழ்விசும்பணிமுகிலில்.

இப்படி ஆழ்வார் சூழ்விசும்பணிமுகிலில் அவருடைய மேல் (ஊர்த்த்வ) திசைப் பயணத்தை வருணிக்கிறார் என்பது தெளிவாகிறது அல்லவா? அத்திசைப் பயணத்திலே ஆழ்வார் மங்களாசாஸனம் செய்தருளும் திவ்யதேசம், நாம் இவ்வாழ்க்கையிலேயே சென்று அனுபவித்து மீளக் கூடிய திவ்ய தேசம், திருக்குடந்தை. இது இத் திருவாய்மொழியின்

மடந்தையர் வாழ்த்தலும், மருதரும் வசுக்களும்
தொடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர் தொடு
கடல் கிடந்த எங்கேசவன் கிளரொளி மணிமுடி
குடந்தை எங்கோவலன், குடியடியார்க்கே.

என்கின்ற பாசுரத்திலே அனுஸந்திக்கப் படுவதைப் பாருங்கள்,

இப்பாசுரத்தை இன்னும் நன்கு சுவைத்திட வாய்ப்பாக அடியேன் பிதாமஹர் அருளிய திருவாய்மொழியின் ச்லோக வடிவில் உள்ள ரக்ஷையாக (இப்படித் தான் கீர்த்தி மூர்த்தியான மஹாவித்வான் ஸ்ரீமதுபயவே வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி இந்த நூலைப் பாராட்டி அருளினார்) ப்ரதிபிம்பலஹரீ என்கின்ற ஸம்ஸ்க்ருத மொழிபெயர்ப்பு உதவிடும் என்பதால் அதனையும் இங்கே தருகிறேன்

தேவீஷ்வேவம் ஸவஸு மருதோ மங்களாசாஸனோத்கா-
ஸ்வந்வேதாஸு ஸ்துதிமரசயன் சாயின: கேசவஸ்யச
நிம்னேசப்தௌ த்யுத்-மணிமகுடவத்கும்பகோணேசிதுர்மே
கோபாலஸ்யாஸ்வகுலபவனம் தாஸபாவம் கதானாம்

இப்பொழுது சொல்லுங்கள். ஊர்த்த்வம் என்கிற மேல்திசைக்கு அதிபதியாகத் திருக்குடந்தை ஆராவமுதாழ்வான் திகழ்கிறான் என்று அனுபவிப்பது பொருத்தமானது தானே.

ஆக வேதத்தாழ்வான் ஆராவமுதாழ்வானையே ஊர்த்த்வ திசைக்கு அதிபதி என்று மங்களாசாஸனம் செய்கிறான் எனப் புரிந்து கொள்வதில் யாதொரு தடங்கலும் இல்லை!

அது சரி. ஆனால் வேதம் தஸ்யாஸ்தே ப்ருஹஸ்பதிரதிபதி: என்று ப்ருஹஸ்பதி என்ற பெயருக்குரிய தேவனை அல்லவா ஊர்த்த்வா என்கிற திசைக்கு அதிபதியாகக் காட்டிடுகிறது. ப்ருஹஸ்பதி என்பது தேவகுருவின் பெயர் அல்லவா? என்ன வேண்டா.

இதே உதகசாந்தித் தொகுப்பில் உள்ள ஆசுச்சிசான: என்று தொடங்கும் 12- ஆவது அனுவாகம் அப்ரதிரதம் என்ற பெயர் பெற்றது. அதனில் நான்காவது மந்திரம் "ப்ருஹஸ்பதே! பரி தீய'' என்று தொடங்கிடுகிறது. அங்கு ப்ருஹஸ்பதி என்ற சொல் ஆராவமுதாழ்வனை எப்படிக் குறிக்கும் என்று விளக்கியுள்ளேன்.

வாக் வை ப்ருஹதீ அதாவது சொல்லே பெரியது என்று சாந்தோக்ய உபநிஷதம் சொல்கின்றது. செவிக்கினிய செஞ்சொல் ஆனதால் பெரியது அதாவது ப்ருஹதீ ஆகத் திகழ்வது அருளிச் செயல் ஆகிற தமிழ் வேதம். அந்த ப்ருஹதீ ஆன தமிழ் வேதத்தைப் பாதுகாத்து அருளியதாலேயே ஆராவமுதாழ்வான் ப்ருஹஸ்பதி எனப்படுகிறான்.

மேற்படி அப்ரதிரதம் என்கின்ற அனுவாகம் ஸ்வஸ்திவாசனம் என்ற தொகுப்பில் முதல் அனுவாகம் ஆகவும் ஓதப்படுகிறது. ஸ்ரீரங்கநாத பாதுகாவில் அடியேன் பரமைகாந்திகளின் ஸ்வஸ்திவாசனம் என்ற தலைப்பில் எழுதி வரும் தொடரில் அதற்கு விரிவான விளக்கம் எழுதி இருக்கிறேன். அப்பகுதி தனியான புத்தகமாக வேதம் போற்றும் திவ்யதேசங்கள் என்ற தலைப்பில் வெளியிடப் பட்டது. அதன் முதல் பதிப்பு முழுவதும் தீர்ந்து போய் இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளிவந்துள்ளது.

அதனால் இங்கு கீதாசார்யனில் மீண்டும் அதன் விரிவுரையை எழுதாது அந்தப் புத்தகத்திலே கண்டு கொள்ளுங்கள் என்று எழுதிப் போந்தேன். அந்தப் புத்தகத்திலே 78-ஆம் பக்கம் தொடங்கி 80-ஆம் பக்கம் உட்பட உள்ள பகுதியில் இதன் விரிவைக் காணலாம்.

இவ்வாறு மேல் (ஊர்த்த்வா) திசைக்குப் பாதுகாவலன் அதிபதி ஆக ஆராவமுதாழ்வானை வேதத்தாழ்வான் மங்களாசாஸனம் செய்தருளிய படி.

சூழ்விசும்பணி முகிலில் அடியேன் மேற்கோள் காட்டிய பாசுரத்திலே குடந்தை எங்கோவலன் என்று ஆழ்வார் ஆராவமுதாழ்வானைக் குறிப்பிடுவதால் ஆழ்வாருக்கு அப்போது ஆராவமுதாழ்வான் கோபாலன் திருக்கோலத்திலே காட்சி அளித்திருக்கிறான் என்பது தெளிவு. அதற்கேற்பக் குடந்தையில் வடக்குப் பகுதியில் பெரிய கடை வீதியிலே உள்ள திருக்கோயிலில் ராஜகோபாலனாக எம்பெருமான் இன்றும் நமக்குக் காட்சி அளிக்கிறான். வடக்குப் பகுதி என்பதில் ஒரு குறிப்பு உள்ளது. அது யாது?

வடக்கு வாசல் வழியாகப் போவது என்று கூறுவது அவதார ஸமாப்தியைச் சொல்லும் இடக்கரடக்கல் என்று கொள்ளலாம்.

ஈட்டிலே பிறந்தவாறும் ப்ரவேசத்திலே

"ஸர்வேச்வரன் க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம் பண்ணித் திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான்" என்று கேட்டு, "அங்கே யதாமனோரதம் நமக்குக் கலந்து பரிமாறலாம்" என்று தெற்குத் திருவாசலாலே சென்று புக "இப்போது இங்ஙனே வடக்கில் திருவாசலாலே புறப்பட்டுத் தன்னுடைச் சோதியேற எழுந்தருளினான்" என்று கேட்டு விழுந்து கிடந்து கூப்பிடுகிறார்" என்று பிள்ளான் பணிக்கும்" என்ற நம்பிள்ளையின் திவ்யஸூக்தியை வடக்குத் திருவீதிப்பிள்ளை பட்டோலை செய்துள்ளதைப் பார்க்கிறோம்.

திருவரங்கத்திலே பெரும்பாலோர்க்கு வடக்கு வாசல் வழியாகவே இறுதி யாத்திரை நடைபெறுவது அங்குள்ள அமைப்பு..

மத்யரங்கம் எனப் போற்றப்படும் திருக்குடந்தையிலும் இதே அமைப்புத் தான். ஆனாலும் திருக்குடந்தையிலே வாழ்ந்த ப்ரபன்னர்களுக்கு அர்ச்சிராதிகதியினை நினைப்பூட்டும் அந்த வடக்கு நோக்கிய ஊர்வலத்திலே குடந்தை எங்கோவலனாக எம்பெருமான் ஆராவமுதாழ்வான் ப்ரபன்னஜனஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வாருக்குக் காட்சி அளித்தருளியது போல இன்றும் காட்சி தரும் அமைப்பு இருப்பது ஒரு சிறப்பு. இது நிற்க.

தன்னை விட பகவதனுபவத்தை விரைவிலே தருவதில் சிறப்புடன் திகழும் தமிழ் வேதத்தைப் பாதுகாத்தருளிய ஆராவமுதாழ்வானின் ஆளுகையில் திகழும் திசையாக ஊர்த்த்வா என்கின்ற மேல்திசையைக் குறிப்பிட்டு வேதத்தாழ்வான் அதனாலேயே அதிபத்னீ நாம அஸி என்று அத் திசையைத் திசைகளுக்கெல்லாம் பாதுகாப்பு அருளும் திசை அதாவது தலைவி என்று பெயர் சூட்டிப் பரவிடுகிறான். மேலும் அத்திசையை ப்ருஹதீ அதாவது பெரிய திசை என்கிறான். (தொடரும்)

# ஆழ்வார் திருநகரி வானமாமலை மடம் ஜீர்ணோத்தாரணம்

ஸ்ரீமந்நாராயணனாலே மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்களில் தலைவர் நம்மாழ்வார். நம்மாழ்வாரின் திருவவதார ஸ்தலம் ஆழ்வார்திருநகரி. இந்த சரித்திரச் சிறப்பு மிக்க ஸ்தலத்தில் நம்மாழ்வாரின் க்ருபையால், நம்மாழ்வார் மற்றும் ஸ்ரீ ராமானுஜரின் திருமேனிகள் மதுரகவி ஆழ்வாராலே தாமிரபரணி ஆற்றில் இருந்து காய்ச்சி எடுக்கப்பட்டன. ஸ்ரீரங்கநாதனுக்கே ஆசார்யரான மணவாள மாமுனிகளும் இந்த திவ்யதேசத்திலேயே அவதரித்தார். மாமுனிகளின் முதல் சிஷ்யர் ஸ்ரீ வானமாமலை மடத்தின் முதல் ஜீயரான பொன்னடிக்கால் ஜீயர். ஸ்ரீவானமாமலை மடம் ஸ்ரீ தெய்வநாயகப் பெருமாளின் திவ்ய ஆணையின் பேரிலும் மாமுனிகளின் அநுக்ரஹத்தின் பேரிலும், பொன்னடிக்கால் ஜீயரால் ஏற்படுத்தப்பட்டது. இந்த மடத்தின் கிளைகள் பாரத தேசமெங்கும் அமைந்துள்ளன.

முக்கியமாக ஆழ்வார் திருநகரியில் அமைந்துள்ள ஸ்ரீவானமாமலைமடம் தனிச்சிறப்பு வாய்ந்தது. வருடந்தோறும் எம்பெருமான் பொலிந்து நின்றபிரான் மற்றும் ஆழ்வார் ஆகியோர், அவரவர் உத்ஸவ ஸமயங்களில் ஸ்ரீமடத்துக்கு எழுந்தருளி மண்டபப்படி கண்டருள்கின்றனர். நம்மாழ்வாரின் வைகாசி விசாக மஹோத்ஸவத்தில் கடைசி மூன்று நாள்கள் ஸ்ரீமத்பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமி எழுந்தருளி திருக்கோயில் மரியாதைகளையும் முதல் தீர்த்தத்தையும் பெற்றுக் கொள்கிறார்.

இம்மடத்தில் இருபத்தொன்பதாம் பட்டதை அலங்கரித்து எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பட்டர்பிரான் ஜீயர் ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் ஆழ்வார் திருநகரி மடத்தின் ஸ்ரீகார்யமாகவே எழுந்தருளியிருந்தார். அவருடைய நூற்றாண்டு இவ்வருடம் கொண்டாடப்படுகிறது. அதன் நினைவாக ஆழ்வார் திருநகரி வானமாமலை மடம் தற்போது ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது.

உள்ளூரில் உள்ள ஸ்ரீமடத்து சிஷ்யர்களின் பெரு முயற்சியால், ஸந்நிதி புனர் நிர்மாணமும், ஜீயர் ஸ்வாமிக்குத் தங்கும் அறையும் ஸமீபத்தில் முடிக்கப்பட்டது. இது தவிர, மடம் முழுவதுமே சீர்செய்யப்பட வேண்டிய நிலையே உள்ளது. மேலும் வைதிக கைங்கர்யங்கள் செய்வதற்கு வசதியாக ஒரு மண்டபமும் நிர்மாணிக்கும் எண்ணம் உள்ளது. மடம் முழுவதும் ரிப்பேர் செய்ய 27 லட்சம் வரைத் தேவைப்படுகிறது. இந்த பெரு முயற்சிக்கு நம் வர்த்தமான ஜீயர் ஸ்வாமி பெரும் ஊக்கமும் ஆசீர்வாதமும் அளித்துள்ளார். ஸ்ரீமடத்து சிஷ்யர்களையும் அபிமானிகளையும் இந்தக் கைங்கர்யத்துக்குத் தாராளமாகப் பொருளுதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த திவ்யதேசம் மற்றும் ஸ்ரீ மடத்தின் பெருமைகளைக் கருத்தில் கொண்டால், இது எம்பெருமான், ஆழ்வார், எம்பெருமார், ஜீயர் (மாமுனிகள்) மற்றும் ஜீயர் (பொன்னடிக்கால் ஜீயர்) ஆகியோருக்கு ஒரே நேரத்தில் கைங்கர்யம் செய்யக் கூடிய பெரிய வாய்ப்பு என்பது திண்ணம். வரும் சித்திரை மாதத்துக்குள் முழு வேலைகளையும் முடித்து ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும் என்பது ஸ்ரீமடத்தின் விருப்பம். இதைக் கருத்தில் கொண்டு இக்கைங்கர்யத்துக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வங்கிக் கணக்கு விவரங்கள்:

A/c Name: Sri Vanamamalai Ramanuja Jeeyar Swami Sannidhi.
A/c No: 11200549610 State Bank of India, Nanguneri branch.
IFSC - SBIN0001021

தயவு செய்து பணம் அனுப்பியபின் எங்களுக்கு ஈமெயில் மூலமாகவோ ஃபோன் மூலமாகவோ உங்கள் விவரங்களை அனுப்பவும். எங்கள் தொடர்பு விவரங்கள்: ஸ்ரீ ஆதிநாதன் – +91 96770 51330 ஸ்ரீ ரெங்கராஜன் – +91 98450 51743 ஸ்ரீ தோதாத்ரி ஸ்ரீநிவாஸன் – +91 96770 35530 ஸ்ரீ ஸாரதி தோதாத்ரி – +91 94454 00573

# திருமங்கையாழ்வாரும் திவ்யதேசங்களும்

(45) *திருதெற்றியம்பலம்*

செம்பொன்செய்கோயிலுக்கு அடுத்தபடியாகத் திருத்தெற்றி அம்பலம் எனும் திவ்யதேசத்தைத் திருமங்கையாழ்வார் ஒரு பதிகத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார். திருதெற்றியம்பலம் தெற்றி அம்பலம் என்றால் மேடான அம்பலம் என்று பொருள் கூறப்பெறுகிறது. நூற்றெட்டு திவ்யதேசங்களில் இந்த ஒருதிவ்யதேசம் மட்டுமே 'அம்பலம்' என்கிற பெயரால் அழைக்கப்படுகிறது. நான்கு திருக்கரங்களுடன் சயன திருக்கோலத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறார். இத்தலத்தைப் பற்றிய பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும் முதல் பாதியில் எம்பெருமானுடைய சரித்திரங்களையும் பின் பாதியில் திருத்தலத்தின் சிறப்பையும் அருளிச்செய்கிறார்.

**தான்போலுமென்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருப்பானரக்கர்தங்கள்**
**கோன்போலுமென்றெழுந்தான் குன்றமன்ன இருபதுதோளுடன் துணித்த ஒருவன் கண்டீர்**
**மான்போலும் மென்னோக்கின் செய்யவாயார் மரகதம்போல் மடக்கிளியைக் கைமேல் கொண்டு**
**தேன்போலும் மென்மழலை பயிற்று நாங்கூர்த் திருத்தெற்றியம்பலத்தென் செங்கண்மாலே.**

அழகிய பெண்கள் வசிக்கும் இடமான திருத்தெற்றி அம்பலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் இராவணனை அழித்தவன் என்று இப்பாசுரத்தில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். இப்பாசுரத்தின் முன்னடிகளுக்குப் பொருள் கொள்வதில் சிரமம் ஏற்பட்டதாகவும், பராசரபட்டர் மிக எளிதில் பொருள் கூறிவிட்டதாகவும் பெரியவாச்சான்பிள்ளை உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தான் போலும் என்றெழுந்தான் தரணியாளன்; அதுகண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன்போலும்' என்பது வரை உள்ள சொற்கள் இராவணனுடைய வார்த்தை என்பது பட்டர் அளித்த விளக்கமாகும். "ஒரு மானிடன் எனக்கு எதிரி என்று துணிந்து வருவதாம்; அதை அரக்கர் தலைவனான நான் பொறுத்திருப்பதாம்" என்று வெகு அலட்சியமாகக் கூறிக்கொண்டு யுத்தத்திற்கு வந்த இராவணனுடைய மலைபோன்ற இருபது தோள்களையும் துணித்தவன் எழுந்தருளியுள்ள இடம் திருத்தெற்றி அம்பலம்; அவ்வூரில் உள்ள அழகிய பெண்கள் அழகிய கிளிகளைத் தங்கள் கைகளில் வைத்துக் கொண்டு, தேன்போல் இனிய மழலைப் பேச்சுக்களைக் கற்பிக்கின்றனர் என்றருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார்.

பகை அரசர்களுடைய மணிமுடிகளும், வீரமும், தேஜஸ்ஸும், அவ்வரசரர்களது மனைவிகளின் காதணிகளும், தகப்பனாரான வசுதேவருடைய காலிலே இடப்பட்ட விலங்குகளும் கழலும் படியாக வந்து தோன்றியவன்; யசோதையின் வடிவு கொண்டு வந்த பூதனையின் விஷத்தைக் குடித்தவன்; படல் இட்டு மூடிவைத்த சிறு குடில்களில் நுழைந்து, அழகிய கண்களை உடை பெண்களின் சேலைத்தலைப்பைப் பற்றி இழுத்துக் குறும்புகள் செய்து இடைச்சேரி முழுதும் திரிந்தவன்; நப்பின்னைக்காக எருதுகளை அடர்த்தவன்; திருமகளோடும், நப்பின்னைப் பிராட்டியோடும் கூடியிருப்பவன்; இராவணனை அழித்தவன்; மாவலியிடம் சென்று மூவடிமண் தானம் பெற்று உலகளந்தவன்; வராகவதாரம் செய்து, பூமிப்பிராட்டியைத் தனது

கோட்டிடை வைத்தருளியவன்; பிரளயகாலத்தில் உலகங்கள் அனைத்தையும் தன் வயிற்றுக்குள் வைத்தருளியவன் என்று இத்தலத்து எம்பெருமானுடைய சரித்திரங்களைத் திருமங்கை ஆழ்வார் போற்றுகின்றார்.

தாமரைப்பூவில் நுழைந்த நண்டினுடைய வளையில் பாக்கு மரங்களின் முற்றின பாளையானது வெளுத்த முத்துக்களை இறைக்கின்றன; செழித்து வளர்ந்த நெற்பயிர்களின்மீது கருநெய்தற்பூக்கள் வரிசையாகப் படர்ந்துள்ளன; வண்டுகளின் ஆரவாரமும், பூக்கொய்வதற் காக வந்த மங்கைகளின் பாதச் சிலம்புகளின் ஒலியும் நிறைந்துள்ளன; ஓங்கியிருக்கின்ற தென்னை மரங்களிலிருந்து தேங்காய்கள் மாமரங்கள்மீது விழ, மாம்பழங்கள் உதிர்ந்து விழ, அவற்றைத் திரட்டியுருட்டிக்கொண்டு பொன்னியாறு பெருகுகின்றது; அழகிய சோலைகளால் சூழப்பெற்று, சந்திரனளவும் ஓங்கிய மாடங்களை உடையது; மலை மலையான மாடங்களை உடைய வீதிகளில் இனிய பேச்சை உடைய பெண்கள் தங்கள் புருவ நெறிப்பால் ஆண்களைக் கவர்கின்றனர்; அழகிய பெண்கள் கிளிகளைப் பேசும்படி பழக்குகின்றனர்; பெண்கள் நீரில் படிந்து நீராடுகையில் அவர்கள் பூசியிருந்த குங்குமக் குழம்புகள் கரைந்ததனால் சிவப்பு நிறம் பெற்ற நீரானது வெண்மணல்மேல் தவழ்கின்றது; நான்மறைகளும், ஆறு அங்கங்கங்களும், ஏழிசையும், இதிகாச புராணங்களும் எல்லாத் திசைகளிலும் ஒலிக்கப் பெற்றது; சிறந்த செல்வத் தையும் வேதங்களையும் உடைய அந்தணர்கள் வாழப்பெற்றது; உயர்ந்த மணிமாடங்களை உடையது என்று திருத்தெற்றியம்பலத்தின் சிறப்பை திருமங்கையாழ்வார் வருணிக்கின்றார்.

### (46) *திருமணிக்கூடம்*

திருத்தெற்றியம்பலத்திற்கு அடுத்தபடியாகத் திருமணிக்கூடம் எனும் திவ்யதேசத்தை ஒரு பதிகத்தால் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

**மாத்தொழில் மடங்கச் செற்று மருதிற நடந்து வன்தாள்**
**சேத்தொழில் சிதைத்துப் பின்னைசெவ்வித்தோள்புணர்ந்தவெந்தை**
**நாத்தொழில் மறை வல்லார்கள் நயந்தறம் பயந்த வண்கைத்**
**தீத்தொழில் பயிலுநாங்கூர்த் திருமணிக்கூடத்தானே.**

கேசி என்ற அசுரனுடைய தீய தொழில் முடங்கும் படி அவனை கொன்று, இணைந்த மருத மரங்களிடையே தவர்ந்து சென்று அவற்றை முடித்து, திண்ணிய கால்களுடைய எருதுகளின் தீய தொழிலை அழித்து நப்பின்னை பிராட்டியின் அழகிய தோள்களை அணைத்தவனாகிய என் ஸ்வாமி திருநாங்கூர் திருமணி கூடத்திலுறைபவன். இத்தலத்தின் சீர்மை நாவின் தொழிலாகிய அத்யயனம் செய்து வேதங்களை ஆராயந்தறிந்தவர்களான அந்தணர்கள் ஆதரித்து தர்மத்தை வளர்க்கின்றனர். தங்களது உதாரமான கைகளால் அக்னி தர்மங்களை இயக்கும் பெருமை வாய்ந்தது. இப்பாசுரத்தின் ஈற்றடியில் “தீத்தொழில் பயிலும்” என்றவிடத்து விரோதாபாஸாலங்காரம் பயின்றுள்ளது. தீத்தொழில் என்பதற்கு தீயதொழில் (கெட்ட காரியம்) என்றும் பொருள் படுமாதலால் அதனை முந்துற விரோத பொருளாகக் கொள்ள வேண்டும். வேதமோதி தர்மங்களை அனுஷ்டிப்பவர்கள் என்று மூன்றாம் அடியில் சொல்லி வைத்து, அன்னவர்கள் தீயதொழிலை பயில்கின்றனர் என்பது விரோதம். தீத் தொழில் என்பதற்குத் தீயினால் செய்யப்படும் தொழில் என்று பொருள் கொண்டு, வேள்விகள் முதலியவற்றை செய்பவர்கள் என்பது உண்மையான கருத்தாகும்.

இத்தலத்தைப் பற்றிய பதிகத்திலும் முன் இரண்டடிகளில் எம்பெருமானது செயல்களையும் பின் இரண்டடிகளில் ஊரின் சிறப்பையும் வருணிக்கின்றார்.

கஜேந்திரனது துன்பம் தீர்த்தவன்; கோவர்த்தனமலையைக் குடையாகப் பிடித்து மழை தடுத்தவன்; பூதனையை அழித்தவன்; இலங்கையின் துன்பம் தீர அம்பு எய்தவன்; கேசியை வதம் செய்தவன்; மருதமரங்களை முறித்தவன்; எருதுகளை அடக்கி நப்பின்னையை மணம்புணர்ந்தவன்; கம்ஸனால் ஏவப்பட்ட யானையை அழித்தவன்; குருந்த மரத்தைச் சாய்த்தவன்; பகாசுரனை அழித்தவன்; எருதுகளை அடர்த்தவன்; சூர்ப்பணகையின் காது மூக்குகளை அறுத்தவன்; மீன், வாமனன், அன்னம், வராஹம், நரசிங்கன், ஹயக்ரீவன் முதலிய அவதாரங்களைச் செய்தவன்; அண்டங்களும் சூரிய சந்திரர்களுமாக ஆகி நின்றவன்; மலைகள், ஆகாயம், பூமி, நீர், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் இவையனைத்தும் தானேயாகி நிற்பவன்; ஐயம், துணிவு, பொய், மெய், மேகங்கள் முதலிய அனைத்தும் தானேயாயிருப்பவன்; பாவம், அறம், மோட்சம், இன்பம், துன்பம், கோபம், அருள் முதலிய அனைத்துக் குணங்களுமாயிருப்பவன் என்று இத்தலத்து எம்பெருமானைப் பலவாறு போற்றுகின்றார்.

அழகிய காவிரி ஆறானது பொற்குவியல்களை கொண்டு வந்து தள்ளப் பெற்றது; கொவ்வைக்கனி போன்ற வாயை உடைய பெண்கள் பூசியிருந்த குங்குமக் குழம்பு கலந்து பெருகுகின்ற நீரை உடையது; வேதமோதிய அந்தணர்கள் வேள்விகள் முதலானவை செய்யப்பெற்றது; மாம்பழங்களை உண்ட குரங்குகள், வாழை மரத்தில் பாய்ந்து, இனிய வாழைப்பழங்களை உண்ணப்பெற்றது; பாண்டியனையும் சோழனையும் வென்ற வீரர்கள் வாழுமிடம்; பெரிய வீதிகள், கழனிகள், தோட்டங்கள், மாட மாளிகைகள் முதலிய இடங்களில் தென்றல் காற்றானது வீசப்பெற்றது; தாமரைப்பூ வெளிப்படுத்தின தேனைப் பருகிய வாளைமீன்கள் பாய்ந்து விளையாடப்பெற்றது; சந்திரமண்டலத்தளவும் ஓங்கிவளர்ந்த மாடங்களை உடையது என்று இப்படிப் பலவாறாக திருமணிக்கூடத்தின் சிறப்பையும் திருமங்கையாழ்வார் வருணித்துள்ளார்.

### (47) திருக்காவளம்பாடி

கண்ணன் ஸத்யபாமையுடன் சேர்ந்து நரகாஸுரனை அழித்ததான். இந்திரன் வருணன் ஆகியோரிடமிருந்து நரகாசுரன் அபகரித்த பொருட்களை கண்ணன் அவர்களுக்கே மீட்டு கொடுத்துவிட்டான். அப்போது இந்திரனின் தோட்டத்திலிருந்த பாரிஜாத மலரை சத்தியபாமை கேட்க, இந்திரன் தர மறுத்துவிட்டான். அதனால் சினம் கொண்டு இந்திரனுடன் போரிட்டு அவனுடைய காவளத்தை (பூம்பொழிலை) அழித்த கண்ணன் தான் இருப்பதற்குக் காவளம் போன்ற பொழிலை தேடி இக்காவளம் பாடியிலேயே நின்று விட்டான் என்பர். திருமணிக்கூடத்திற்கு அடுத்தபடியாகத் திருக்காவளம்பாடியை ஒரு பதிகத்தால் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார். எம்பெருமானுடைய பெருமைகளையெல்லாம் அனுபவிக்கும் திருமங்கை ஆழ்வார் அவனைவிட்டு வாழ முடியாமையாலே உலக வாழ்க்கையை வெறுத்து அவனைப் பெறுவதற்கு உபாயமாக பலகாலும் பிரபத்தி செய்கிறார். பிரபத்தி செய்ய வேண்டியது ஒரே முறையெனினும் ஆற்றாமையால் அவ்வப்போது பெருமானைச் சரணமாகப் பற்றுகிறார். கர்மஞான பக்திகளால் பெருமானைப் பெற மாட்டதவர், இதற்கான வகை தம்மிடமில்லாததால் பெருமானே புகல் – வேறொரு வரும்

புகலில்லை என்று பெருமானிடம் விண்ணப்பம் செய்து, ‘‘நானும் எனக்கில்லை, பிறரும் எனக்கில்லை எனக்கு நீயே ரக்ஷகனாக வேண்டும்’’ என்று திருநாங்கூர் காவளம்பாடி எம்பெருமான் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

**தாவளந்து உலகம் முற்றும் தடமலர்ப் பொய்கை புக்கு**
**நாவளம் நவின்றங்கேத்த நாகத்தன் நடுக்கம் தீர்த்தாய்**
**மாவளம் பெருகி மன்னு மறையவர் வாழும் நாங்கைக்**
**காவளம்பாடிமேய கண்ணனே களைகண் நீயே**

‘உலகத்தையெல்லாம் தாவி அளந்தவனும், கஜேந்திரனுடைய துன்பத்தைத் தீர்த்தவனுமான எம்பெருமானே! வேதமாகிய செல்வத்தைப் பெற்ற அந்தணர்கள் வாழப்பெற்ற நாங்கைக் காவளம்பாடியில் எழுந்தருளியிருக்கும் கண்ணனே! நீயே என்னைக் காக்கவேண்டும்!’ என்று வேண்டுகின்ற திருமங்கையாழ்வார் தொடர்ந்து மற்ற பாசுரங்களிலும் இதேபோல் வேண்டுகின்றார்.

ஏனமாகி மண் இடந்தவனும், மாவலியின் வலிமையை அழிப்பதற்காக அவனுடைய வேள்வியில் யாசகனாகச் சென்றவனுமான எம்பெருமானே! விரைவில் எதிரிகளை அழித்தவர்கள் வாழ்கின்ற நாங்கூர்க் காவளம்பாடியில் எழுந்தருளி யிருக்கும் கண்ணனே! களைகண் நீயே! வாலியின் மார்வில் அம்பெய்து கொன்று அவனுடைய தம்பிக்கு அரசு அளித்தவனே! மாங்கனிகளும், பலாக் கனிகளும் தேன் பெருக்குகின்ற நாங்கைக் காவளம்பாடியில் எழுந்தருளியிருப்பவனே! களைகண் நீயே! போரில் இராவணனுடைய பத்துத் தலைகளையும் அறுத்துக் கொன்று, அவனுடைய தம்பிக்கு அரசை அளித்தருளியவனே! சுனைகளில் கயல் மீன்கள் அஞ்சித் துள்ளியோடும்படியாக வண்டுகளானவை ஆரவாரத்துடன் தேனைப் பருகுமிடமான காவளம்பாடியில் எழுந்தருளியிருப்பவனே! நீயே களைகண்! காளியன் எனும் பாம்பின்மீது பாய்ந்து நடமாடியவனே! திருமகளை மார்வில் வைத்துக் கொண்டவனே! மலைகள் போன்ற மாளிகைகள் பொருந்திய நாங்கூர்க் காவளம்பாடியில் எழுந்தருளியிருப்பவனே! நீயே களைகண்! மல்லர்களை அழித்துக் கம்ஸனைக் கொன்றவனே! பல்லாயிரம் அரசர்கள் முடியும்படியாகப் பாரதப்போரை நடத்தியவனே! சோலைகளின் நிழலிலே மணம்வீசப் பெற்ற நாங்கூர்க் காவளம்பாடியில் எழுந்தருளியிருப்பவனே! நீயே களைகண்! தருமபுத்திரனுக்கு அரசு அளிக்க விரும்பித் தூது சென்றவனே! கம்ஸனால் ஏவப்பட்ட யானையைப் பாகனுடன் கொன்றவனே! சோலைகளால் சூழப்பெற்ற நாங்கூர்க் காவளம்பாடியில் எழுந்தருளியிருப்பவனே! நீயே களைகண்! சத்தியபாமைப் பிராட்டிக்காக இந்திரனை வென்று, அவனுடைய நந்தவனத்தின் அழகை அழித்து, கற்பகமரத்தைக் கொண்டுவந்தவனே! பூக்கள் மிகுந்த சோலைகளால் சூழப்பெற்றதும், இந்திரனால் செய்யப்பெற்றதுமான நாங்கூர்க் காவளம்படியில் எழுந்தருளியிருப்பவனே! நீயே களைகண்! சந்தம், சமயம், ஐம்பூதங்கள், முடிவு, தொடக்கம், அருமறைகள் இவை அனைத்திற்கும் நிர்வாஹகனான எம்பெருமானே! பாரிஜாதம் பொருந்திய சோலைகளில் அழகிய மயில்கள் கூத்தாடப்பெற்ற காவளம்பாடியில் எழுந்தருளியிருப்பவனே! நீயே களைகண்!

இவ்வாறு ஒவ்வொரு பாசுரத்திலும் காவளம்பாடி எம்பெருமானைத் துதித்து, அவனுடைய திருவடிகளைத் திருமங்கையாழ்வார் சரணடைகிறார்.

# மூவகைத் தீர்த்தங்கள்

## T.C.A. வேங்கடேசன்

ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று (மழை) நீர் என்பதை முந்நீர் என்பர்கள் தமிழர். நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் "முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில்வண்ணனே!" என்கிறார்.

அதன்றி, மூன்று செய்கையுடைய நீர் – அதாவது படைத்தல், காத்தல், அழித்தல் செய்யும் நீர் என்றும் பொருள் கூறுவர். விரிவுக்கஞ்சி இங்கு இதை விவரிக்கவில்லை.

நம் தலைப்பில் மூவகைத் தீர்த்தம் என்றது இதைத் தான் சொல்கிறதா என்றால். இல்லை, தீர்த்தம் என்பதால் வேறொன்றைக் குறிக்கிறது.

செய்கையையும், அதற்குண்டான அதிகாரியையும் இட்டு இத்தலைப்பு வருகிறது. எப்படி என்று பார்ப்போம்.

வடமொழிச் சொல்லான தீர்த்தம் என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. அதில் ஒன்று தண்ணீர் என்பதாம். இப்பொருளிலேயே இச்சொல் தமிழிலும் பொதுவாக வழங்கி வருவதைக் காண்கிறோம்.

தென்மொழியில் தண்ணீருக்கு நீர், சலம், தீர்த்தம் போன்ற பல பெயர்கள் உள்ளன. ஸமஸ்க்ருதத்திலும் தீர்த்தம், ஜலம், அம்பு, புஷ்கரம் எனப் பல பெயர்கள் இருக்கின்றன.

தன்மைக்கேற்ப நீரானது தண்ணீர், வெந்நீர், சுடுநீர், பனிநீர், நெடுநீர் என பலவகைகளிலும் அழைக்கப்படும்.

நீர் நிலைகளும் கிணறு, குளம், கயம், கேணி, ஏரி, கடல் என்று பல நிலைகளில் காணப்படும்.

நீருக்கு அடைச்சொல்லாகப் பல அடைமொழிகளைப் பயன்படுத்தியுள்ளனர் ஆழ்வார்கள். மாநீர், முதுநீர், முந்நீர், அலைநீர், மணிநீர், பெருநீர், பாயுநீர், விரிநீர், வெள்ளநீர் என்று நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

திருமங்கையாழ்வாரின் இயற்கை வர்ணனைகளில் நீரைப் பற்றி அதிசயமான சில ப்ரயோகங்களையும் நாம் பார்க்கிறோம்.

உதாரணமாக, வண்டறை மாநீர் என்றொரு தொடர் இடுகிறார் ஆழ்வார். அதாவது வண்டுகள் படிந்து அதனால் ஓசை எழக்கூடியதான சிறந்த நீர் என்கிறார்.

இன்னொன்று துஞ்சா நீர் என்பதாகும். துஞ்சுதல் என்பதற்கு தூக்கம், இறப்பு, சோர்வு என்ற பொருள்கள் உண்டு. அதைத் திருக்கோவலூர் திவ்யதேசத்தில் பெண்ணை நதிக்குப் பயன்படுத்தி "துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணை" என்கிறார் ஆழ்வார். அதாவது, மாறாத தன்மை உடைத்தாய் இருக்கும் என்றபடி.

எங்கும் எதிலும் பாய்ந்து கலக்கும் நீரின் தன்மையால் நீர்மை என்றொரு குணம் ஏற்படுகிறது. பெரியோர்கள் பேதம் நோக்காது எல்லாரொடும் புரையறக் கலந்து பழகும் குணமே இது. வடமொழியில் இதை ஸௌசீல்யம் என்பர்கள்.

திருமங்கையாழ்வாரின் ஏழை ஏதலன் பாசுரத்தில் ஸ்ரீ ராம பிரானின் நீர்மை குணம் விவக்ஷிதம்.

எம்பெருமானுடைய பல நிலைகளில், நீராய் இருக்கும் நிலையுமுண்டு. புஷ்கரத்தில் எம்பெருமான் நீர் நிலையாக இருக்கிறான்.

ஆழ்வாராசார்யர்களும் அவனைத் தடமாகவும், தடாகமாகவும் வர்ணிக்கின்றனர்.

"வல்லரக்கர் புக்கழுந்த தயரதன் பெற்ற மரதக மணித்தடம்" என்றும், "தாமரை நீள் வாசத் தடம் போல் வருவானே!" என்றும் கூறுகிறார் ஆழ்வார்.

ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "உத்புல்ல பங்கஜ தடாகமிவ" என்றார் பராசர பட்டர்.

முகுந்தமாலையில் குலசேகராழ்வாரும் "கரசரணஸரோஜே காந்திமந்நேத்ர மீநே ஸ்ரமமுஷி புஜவீசி வ்யாகுலே அகாத மார்க்கே ஹரி ஸரஸி" என்றார்.

ஆசார்யர்களும் நாம் குடைந்தாடி ச்ரமம் தீரும் நீர் நிலையாகவே இருக்கிறார்கள் என்று அவர்களை நன்ஞானத்துறையாகக் காட்டுகிறார் நம்மாழ்வார்.

ஆண்டாளும் "சேய்த் தீர்த்தமாய் நின்ற செங்கண்மால்" என்று எம்பெருமானை அழைத்தாள்.

இது நிற்க. இத்தீர்த்தங்கள் மூவகை என்றோமே, அவையாவன?

1. தீர்த்தம்

தீர்த்தம் என்றாலும் நீர் என்றாலும் பொதுவாகத் தண்ணீர் என்ற அர்த்தம் இருந்தாலும், தீர்த்தம் என்ற சொல்லுக்கு பாவனமாக்கும், அதாவது சுத்தி தரும் என்ற அர்த்தமும் உள்ளது என்பதைக் கொண்டு, திருமங்கையாழ்வார் இரண்டையும் சேர்த்து "தீர்த்த நீர்த் தடஞ்சோலைசூழ் திருவேங்கடமடை நெஞ்சமே" என்று தம்முடைய பெரிய திருமொழியிலே காட்டுகிறார்.

தீர்த்தம் என்பது புண்யம் அல்லது பாவனம் தரும் என்பதால் அது நீருக்கு உபலக்ஷணமாயிற்று. "எல்லா ஸம்ருத்தியையும் பண்ணிக் கொடுக்கவற்றான ஜலஸம்ருத்தி" என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.

"கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடுகிற்கும்" என்கிறார் பெரியாழ்வார். எம்பெருமான் திருவடி சம்பந்தம் பெற்றதாலேயே அதற்கு இத்தன்மை வாய்த்ததாம்.

"கங்கையிலும் தீர்த்தமலி" என்கிறார் குலசேகரப் பெருமாள். கங்கையின் புனிதமும், புனிதமாக்கும் தன்மையும், அவனுடைய திருவடி சம்பந்தம் ஒரு முறை பெற்றதால் உண்டாயிற்று. ஆனால் திருக்கண்ணபுரத்தம்மானின் திருவடி சம்பந்தம் நித்யமும் பெற்றதால் அங்கிருக்கும் பொய்கை, கங்கையைக் காட்டிலும் மேன்மை பெற்றதாகிறது.

இக்காரணத்தாலேயும், கங்கையைப் போல் ருத்ர சம்பந்தம் பெறாமல் இருப்பதாலேயும், "கங்கையில் புனிதமாய காவிரி" என்றார் தொண்டரடிப்பொடியாழ்வாரும்.

"கங்காஸாம்யம் புரா ப்ராப்தா ... ஆதிக்யஞ்சாப்யவாப ஸா" என்கிறது ஸ்ரீரங்கமாஹாத்ம்யம்.

எம்பெருமானுடைய திருவாராதனத்தில் உபயோகிக்கப்பட்டதாலேயே நீரும் தீர்த்தமாகிறது என்று கோவில்களிலும், திருமாளிகைகளிலும் பார்க்கிறோம்.

ஆசார்யர்கள் திருவடி சம்பந்தம் பெற்ற நீரை ஸ்ரீபாததீர்த்தம் என்றே கொள்வர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள்.

ஆக, முதல் வகை தீர்த்தம் என்பதாகிறது. அதாவது, சுத்தி செய்யும் கார்யத்தையும், அக்கார்யம் செய்யும் வஸ்துவினாலேயும் தீர்த்தம் என்ற வகை ஏற்படுகிறது என்பதாம்.

2. தீர்த்தன்

தீர்த்தம் என்பது அஃறிணைப் பொருளாகும். அதை அன் விகுதியுடன் இணைத்து எம்பெருமானுக்குரிய திருநாமம் ஆக்குகிறார்கள் ஆழ்வார்கள்.

"தேவாதி தேவ பெருமான் என் தீர்த்தனே" என்றார் ஆழ்வார் தம்முடைய திருவாய்மொழியில். தீர்த்தன் என்றால் என்ன என்றால், தம்மைப் பரிசுத்தன் ஆக்க வல்ல எம்பெருமான் என்கிறார். பூர்வாசார்யர்கள் வ்யாக்யாநம் காண்மின்.

"என்னைப் ப்ரயோஜநாந்தர பரதையைத் தவிர்த்தவன்" – ஒன்பதினாயிரப்படி

"நல்ல போக்யஜாதம் இருக்க, நிஷித்த த்ரவ்யங்களை விரும்புவாரைப் போலே, தானும் தன்னுடைய குணங்களும் இருக்க, சப்தாதி விஷயங்களை விரும்பிப் போந்த என்னை, அவற்றை விட்டுத் தன்னையே விரும்பும்படியான சுத்தியைப் பிறப்பித்த சுத்தியை உடையவன்" – இது ஈடு. இதற்கு அடுத்த பாசுரம்:

தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்
சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான் கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை
பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே?

இங்கு தீர்த்தன் என்பது பரமபவித்ரன் என்ற அர்த்தத்தில் வருகிறது. என்னை மட்டுமன்றி ருத்ரனையும் சுத்தன் ஆக்கி, சிவன் என்னும்படி பண்ணின பரமபவித்ரன் என்கிறார். ஸ்ரீபாத தீர்த்தத்தை முடி மேல் தரித்து ருத்ரன் சிவனாயினான் என்றபடி.

ஸ்ரீராமாயணமும் எல்லோரையும் பாவனமாக்கும் அவன் தன்மையை "பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந" என்றது.

மஹாபாரதம் வனபர்வத்தில் தீர்த்தயாத்ரையில்

பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே
புண்யாநாம் அபி புண்யோஸௌ மங்களாநாஞ்ச மங்களம்

என்றது. பவித்ரங்களுக்குள் எல்லாம் பரமபவித்ரன் என்றும், புண்யங்களுக்குள் எல்லாம் பரமபுண்யன் என்றும், மங்களங்களுக்குள் எல்லாம் பரமமங்களன் என்றும் சொல்லிற்று.

எம்பெருமானேலேயே நமக்குப் பாவனம் என்பதை சாஸ்த்ரமும்

ஓம் அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோபி வா
ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தர: சுசி: என்று கூறுகிறது.

சுத்தி உடையவனோ, இல்லாதவனோ, எவனாயிருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும் தாமரைக்கண்ணனை நினைத்தே உள்ளும் புறமும் சுத்தி அடைவன் என்பதாம்.

மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தவரான திருமங்கையர் கோனும் எம்பெருமானைத் தீர்த்தன் என்கிறார்:

பார்த்தனுக்கு அன்றருளிப் பாரதத்தொரு தேர் முந்நின்று
காத்தவன் தன்னை விண்ணோர் கருமாணிக்க மாமலையை
தீர்த்தனைப் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
மூர்த்தியைக் கைதொழவும் முடியுங்கொல்? என்மொய்குழற்கே

தீர்த்தன், அதாவது பரமபவித்ரன் என்றது, அர்ஜுனனுக்குச் சாரதியாய் இருந்து ரக்ஷித்தும், நித்யஸூரிகளுக்கு அநுபவிக்க உரியனாய் இருந்தும், அதை இங்குள்ளாரும் அநுபவிக்கும்படியாய் திருமாலிருஞ்சோலையில் நின்றும், தன்பேறாகச் செய்து அதனால் பரம சுத்தி உடையவன் என்றபடி.

மற்றோரிடத்தில் நம்மாழ்வார் "என் தீர்த்தனே! என்னும்" என்கிறார். அங்கு கோலமா மழைக்கண் பனிமல்க இருக்கும் பராங்குச நாயகியானவள், எனக்கு நீ முகம்காட்டாதிருந்தாலும் உன்னை ஒழிய மற்றொன்றறியா பரிசுத்தியைத் தந்தவனே என்கிறாள்.

திருவரங்கத்தமுதனாரும் தம்முடைய இராமாநுச நூற்றந்தாதியில் "வாணன் பிழை பொறுத்த தீர்த்தன்" என்று ஸ்ரீ க்ருஷ்ணனைக் கொண்டாடுகிறார்.

3. தீர்த்தகரர்

பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி பாசுரம் காண்மின்.

பண்டிப்பெரும் பதியையாக்கி பழி பாவம்
கொண்டிங்கு வாழ்வாரைக் கூறாதே – எண்திசையும்
பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்!
தீர்த்தகரராமின் திரிந்து

தாழ்ந்தோரைப் பற்றிக் கூறித் திரியாது, எம்பெருமானுடைய திருநாமத்தை எங்கும் சொல்லி நாடு முழுவதையும் பரிசுத்தம் ஆக்குமவராய் ஆகுங்கோள் என்று கூறும் ஆழ்வார், அப்படி இருப்போரை தீர்த்தகரர் என்கிறார்.

உங்கள் பழிபாவம் தீர்ந்து, நீங்கள் சுத்தராவது மட்டுமன்றி மற்றையோரையும் சுத்தப்படுத்துங்கள் என்கிறார் ஆழ்வார். இது "தீர்த்தீ கரோதீதி தீர்த்தகர:" என்ற வ்யுத்பத்தியிலிருந்து தேறுகிறது.

எம்பெருமான், தானும் பாவனத்தைக் கொண்டும், மற்றையோரையும் பாவனர்களாக்குவான் என்பதைச் சேரப்பிடித்து அவனை "அமலன்" என்கிறார் திருப்பாணாழ்வார்.

இங்கு பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம் காண்மின்: "தான் ஒருத்தன் சுத்தனாகையன்று; தன்னோடு ஸம்பந்தித்தாரையும் சுத்தராக்கவல்ல அடியுடைமை." சாஸ்த்ரமும்

அதிபாதக யுக்தோபி த்யாயந் நிமிஷம் அச்யுதம்
பூயஸ் தபஸ்வீ பவதி பங்க்திபாவந பாவந: என்றது.

அதாவது, எம்பெருமானை ஒரு நிமிடம் த்யானம் செய்தால், மஹாபாபியானவனும் மஹாதவம் செய்தவனாகவும், தன் சம்பந்தத்தால் ஒரு வரிசை முழுவதையும் பாவனமாக்கும் பங்க்திபாவனர்களையும் பாவனமாக்குமவன் ஆகிறான் என்றபடி.

திருவாறன்விளை பதிகத்தில் நம்மாழ்வார் அவன் பரமபவித்ரன் என்பதைத் தீர்த்தன் என்று கூறிய பின், அவனைப் பற்றிய திருவாய்மொழிப் பாசுரங்களும் பவித்ரமானவை என்பதை தீர்த்தங்கள் ஆயிரம் என்கிறார். இந்த நாலாவது வகையான தீர்த்தத்தைப் பிறிதொரு சமயத்தில் ஆராய்வோம்.

இவ்விடத்தில் ஆழ்வார் இப்பாசுரங்களை ஓத வல்லவர்கள் பவித்ரமானவர்கள் என்பதை, நித்யஸூரிகள் தங்கள் தேவிமார்களிடத்தில் அவர்களைத் தீர்த்தங்கள் என்றே ஏத்துவர்கள் என்கிறார்:

தீர்த்தனுக்கற்றபின் மற்றோர் சரணில்லை என்றெண்ணி தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தனனாகிச் செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன
தீர்த்தங்கள் ஆயிரத்துள் இவைபத்தும் வல்லார்களை தேவர் வைகல்
தீர்த்தங்களே என்று பூசித்து நல்கியுரைப்பர் தம்தேவியர்க்கே

இத்தால் எம்பெருமான் மட்டுமன்றி அவனடியார்களும் தீர்த்தர்கள் என்றாகிறது.

ஆக தீர்த்தமும், தீர்த்தனும், தீர்த்தகரரும், தாங்களும் சுத்தர்களாய், மற்றையோரையும் சுத்தர்களாக்குகிறார்கள் என்றதாயிற்று.

இம்மூவகைத் தீர்த்தங்கள் மூலமாக நாமும் சுத்தி அடைவோமாக.

**मातृहा पितृहा चापि ब्रह्महा गोघ्न एव च। मासमेकं नरः पापैः तत्र स्नात्वा विमुच्यते ॥12॥**

*யாதொரு மநுஷ்யன் பித்ரு மாத்ரு ப்ரஹ்ம கோக்நனாகிலும் அந்த ஸரஸ்ஸில் ஒரு மாஸம் ஸ்நாநம்பண்ணினால் கீழ்ச்சொன்னபாபங்களினாலே விடப்படுகிறான்.*

**स्वर्णस्तेयी सुरापश्च यश्चान्यः पापकृन्नरः। स्नात्वा मासं स तस्यां वै मुच्यते नात्र संशयः ॥13॥**

*யாதொரு புருஷனாவவன் ஸ்வர்ணாபஹாரியாயும், மத்யபாயியாயும், இருப்பனோ, அவனும், மற்றும் பாபக்ருத்தான புருஷனும், அந்தக் கைரவிணியிலே நியமமாக ஒரு மாஸம் ஸ்நாநம் பண்ணுவனேயானால், அவன் ஸகல பாபங்களினின்றும் விடுபடுகிறானென்பதில் ஸந்தேஹமில்லை.*

**कार्तिकस्य तु मासस्य कृष्णपक्षेऽष्टमीतिथौ। यः श्राद्धकर्म कुरुते स पितॄणां प्रियो मतः ॥14॥**

*யாதொரு புருஷன் கார்த்திகை மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்தில் அஷ்டமி திதியில் அந்தக் கைரவிணீ தீர்த்தில் பித்ருஶ்ராத்தத்தைப் பண்ணுகிறானோ, அந்தப் புருஷன் பித்ருக்களுக்கு மிகவும் அபிமதனாகிறான்.*

**न गया नैव काशी च न क्षेत्रं कौरवं तथा। न पुष्करं च सदृशं तस्य क्षेत्रस्य वै मुने ॥15॥**

*வாரீர் நாரதரே! அந்த பிருந்தாவனத்துக்கு காசியும் கயையும் குருக்ஷேத்ரமும் புஷ்கரமும் ஸமாநமாக மாட்டாது.*

**गीतो यस्तु पुराविद्भिः मुनिभिर्मुनिसम्मतः। श्लोकं श्रृणुष्व देवर्षे तं वक्ष्यामि समाहितः ॥16॥**

*யாதொரு ஶ்லோகமானது ருஷிஸம்மதமோ, அப்படிப்பட்ட அந்த ஶ்லோகமானது புராவித்துக்களான ருஷிகளாலே காநம் பண்ணப்பட்டிருக்கிறது. வாரீர் நாரதரே! அந்த ஶ்லோகத்தை உமக்குச்சொல்கிறேன். நீர் ஸமாஹித மநஸ்கராய் கேளும்.*

**सहस्राण्यपि जन्मानि जह्नुकन्या निषेवणात्। सकृत्कैरविणीस्नानम् अधिकं नात्र संशयः ॥17॥**

*ஜந்மஸஹஸ்ரங்களிலே கங்கையில் ஸ்நாநம் பண்ணுவதிற்காட்டில் கைரவிணியில் ஒருகால் ஸ்நாநமானது அதிஶயிதமென்பதில் ஸந்தேஹமில்லை.*

**नियतो नियताहारो नियतेन्द्रियमानसः। स्नायात्तस्यां सरस्यां तु मन्त्रमेतदुदीरयन् ॥18॥**

*எந்த புருஷனும் நியதனாயும் நியதாஹாரனாயும் மனஸ் முதலிய இந்திரியங்களை ஜயித்தவனாயும் என்னால் சொல்லப்படப்போகிற மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ஸ்நாநம் பண்ணக்கடவன்.*

**अपहर मम दुरितानि प्रदिश त्वं निरुपमां यशोलक्ष्मीम्। भगवति कैरविणि त्वां प्रणमामि जनार्दनप्रिये सुभगे ॥19॥**

*எம்பெருமானுக்கு அர்க்ய பாத்யாத்யுபசாரங்களுக்கு அர்ஹையாய் அதனால் ப்ரியையாய் பாக்யவதியாயிருக்கிற கைரவிணியே! உன்னை தண்டம் ஸமர்ப்பிகிறேன். என்னுடைய ஸகலபாபங்களையும் அபஹரி, உபமாநரஹிதமான யஶோலக்ஷ்மியை உண்டாக்கு.*

**एष मन्त्रस्तु सुमहान् वसिष्ठेन महात्मना। सकाशाद्ब्रह्मणः प्राप्तः परमश्चतुराननात् ॥20॥**

*இப்படிக் கீழே சொல்லப்பட்ட ஶ்லோகரூபமாய்ப் பரமமான இந்த மந்த்ரமானது நாலுவேதங்களையும் நாலு முகங்களிலே தரித்த ப்ரஹ்மாவிடத்தினின்றும் மஹாத்மாவான வஸிஷ்டராலே அடையப்பட்டது.*

**एवमुक्त्वाऽवगाह्य अम्भस्यमले विमलांभसः। मनुजस्तस्य सरसो माधवं प्रतिपद्यते ॥21॥**

*மநுஷ்யனானவன் நிர்மலமான தீர்த்தை உடைத்தான அந்தக் கைரவிணியினுடைய பாபஹரமான தீர்த்தத்தில் இந்த மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ஸ்நாநம் பண்ணி எம்பெருமானை அடையாநிற்கிறான்.*

**अत्र त्वयेदं श्रोतव्यं इतिहासं पुरातनम्। शार्दूलस्य मुनेश्चापि संवादो व्याघ्रजन्मनः ॥22॥**

*வாரீர் நாரதரே! இந்த தீர்த்தத்தினுடைய வைபவவிஷயத்திலே ஶார்தூலர் என்கிற மஹர்ஷிக்கும் வ்யாக்ரஜந்மா என்கிற ருஷிக்கும் ஒரு ஸம்வாதம் பூர்வத்திலே உண்டாயிருக்கிறது. அப்படி ப்ரவ்ருத்தமாயும் புராதநமுமான கதையானது உம்மால் கேட்கப்படத்தக்கதென்று சிவன் சொன்னார்.*

**शार्दूलः – इदमुक्तं त्वया ब्रह्मन् माहात्म्यं बहुशो मुने। गङ्गाया जह्नुकन्यायाः सर्वस्मादधिकं भुवि ॥23॥**
**यथा महानदीष्वेषा प्रशस्ता देववाहिनी। एवं सरस्सु किं तीर्थं तद्वदस्व महामते ॥24॥**

*வாரீர் ப்ரஹ்மநிஷ்டரான வ்யாக்ரஜந்மரே! உம்மாலே ஜஹ்நுகந்யையான கங்கையினுடைய மாஹாத்ம்யமானது பூமியிலே ஸர்வாதிகமாய்ச் சொல்லப் பட்டது. மஹாநதிகளுக்குள்ளே தேவ வாஹிநியான கங்கையானது எப்படி ப்ரஸித்தையோ, அப்படி ஸரஸ்ஸுகளுக்குள்ளே எந்த ஸரஸ்ஸானது ப்ரஶஸ்தமாயிருக்கிறது என்று வ்யாக்ரஜந்மாவை ஶார்தூலர் ப்ரஶ்நம் பண்ணினார்.*

**व्याघ्रजन्मा– साधु पृष्टं त्वया तात श्रृणुष्व कथयाम्यहम्। गङ्गाया अपि यत्तीर्थं प्रशस्तं जगतीतले ॥25॥**

*வ்யாக்ரஜன்மா சொன்னார்: வாரீர் ஶார்தூலரே! உம்மாலே வெகு நன்றாக ப்ரஶ்நம் பண்ணப்பட்டது. கங்கையைக்காட்டிலும் பூமியிலே எந்தத் தீர்த்தமானது ப்ரஶஸ்தமோ, அந்தத் தீர்த்தத்தை நான் சொல்லுகிறேன் கேளும்.*

**यत्तु बृन्दावनं नाम वनं मधुनिघातिनः। जगत्यां प्रियमत्यर्थं नानातरुमृगद्विजम् ॥26॥**

*நாநாவிதங்களான வ்ருக்ஷங்களென்ன, ம்ருகங்களென்ன, பக்ஷிகளென்ன இவற்றை யுடைத்தான ப்ருந்தாவநமென்று பெயரையுடைய எந்தத் துளஸீவநமானது மதுஸூதநனுக்கு இந்த பூமியிலே அதிப்ரியதமமோ!*

**तत्र कैरविणी नाम सरसी मुनिसत्तम। काचिदच्छोदकाऽनेक–विहङ्गमविराजिता ॥27॥**

*வாரீர் ஶார்தூலரே! நிர்மலோதகையாய் நாநாவிதபக்ஷிவிராஜிதையாயிருக்கிற கைரவிணீ என்கிற ஸரஸ்ஸானது அந்த ப்ருந்தாவநத்திலே இராநின்றது.*

**तत्समं जगतीपृष्ठे न कुत्रापि च दृश्यते। सरो वाऽपि तटाको वा नदी वा कूप एव वा ॥28॥**

*இந்த பூமியிலே எந்த இடத்திலேயும் அந்த கைரவிணியோடு துல்யமான ப்ரபாவத்தையுடையதாக ஸரஸ்ஸாவது தடாகமாவது நதியாவது கிணறாவது கிடையாது.*

**गङ्गायामपि च स्नातः स्वर्गमेत्य पुनर्भुवि। जन्म जन्तुरवाप्नोति तत्स्नानी न पुनर्भवम् ॥29॥**

*கங்கையிலே ஸ்நாநம் பண்ணின புருஷனும் ஸ்வர்க்கத்தை அடைந்து புண்யம் க்ஷீணமான உடனே மறுபடியும் பூமியிலே ஜநிக்கிறான். அந்த கைரவிணியிலே ஸ்நாநம் பண்ணினவனோ என்றால் மறுபடியும் புநர்ஜந்மத்தை அடையான்!*

**बहुना किमिहोक्तेन वक्ष्ये संक्षेपतः श्रृणु। धर्मार्थकाममोक्षाणां साधनं तत्सरो मतम् ॥30॥**

*அந்த ஸரோவைபவ விஷயத்தில் பலசொல்லியென்? சொல்லவேண்டியதை ஸம்க்ஷேபமாகச் சொல்லுகிறேன் கேளும். அந்த கைரவிணீ ஸ்நாநமானது தர்மார்த்தகாம மோக்ஷங்களுக்கு முக்ய ஸாதநமாக ருஷிகளால் ஸம்மதிக்கப் பட்டிருக்கிறது.*

**वक्तुं वा वैभवं तस्य शक्तो नैव नरो भुवि। देवो वा देवराजो वा सोऽपि साक्षाद्बृहस्पतिः ॥31॥**

*இந்த பூமியிலே எந்தப் புருஷனும் அந்த ஸரோ வைபவத்தைப் பற்றிச் சொல்ல ஸமர்த்தனல்லன். தேவனாவது ப்ருஹஸ்பதியாவது அதன் வைபவ கதநத்தில் ஸமர்த்தர்களல்லர்.*

**श्रूयते हि पुरा वृत्तमिदं मुनिवरोत्तम। विश्वावसोः कृतज्ञस्य गन्धर्वाधिपतेर्महत् ॥32॥**

*வாரீர் ஶார்தூலரே! க்ருதஜ்ஞனாய் கந்தர்வாதிபதியான விஶ்வாவஸுவினுடைய ஸம்பந்தியாய் மஹத்தரமான ஒரு கதையானது கேட்கப்படுகிறது.*

**स कदाचिन्महाभाग विमानं वरमास्थितः। चचार विमले व्योम्नि गन्धर्ववरसत्कृतः ॥33॥**

*வாரீர் நாரதரே! அந்த விஶ்வாவஸுவானவன் கந்தர்வ ஶ்ரேஷ்டர்களாலே ஸத்கரிக்கப்பட்டவனாய் விமானாரூடனாய்க் கொண்டு நிர்மலமான ஆகாஶத்திலே ஸஞ்சரித்தான்.*

**तस्य सञ्चरतो व्योम्नि गन्धर्वाधिपतेर्मुने। अधस्तादरजोनाम सरः सुविमलोदकम् ॥34॥**

*வாரீர் நாரதரே! அப்படி ஆகாஶத்தில் ஸஞ்சரியா நின்றுள்ள கந்தர்வாதிபதியான விஶ்வாவஸுவினுடைய கீழே நிர்மலோதகமான ஓரானொரு அரஜஸ் என்கிற ஸரஸ்ஸானது இருந்தது.*

**विन्ध्यस्य दक्षिणे पार्श्वे हेमो नाम महागिरिः। त्रीणि श्रङ्गाणि तस्यापि भृशमुच्चैस्तराणि वै ॥35॥**

*விந்த்ய பர்வத்துக்கு தக்ஷிண பார்ஶ்வத்திலே ஹேமமென்று பெயரை உடைத்தான ஒரு மஹாபர்வதமானது இருக்கிறது. அதற்கு மிகவும் உந்நதங்களான மூன்று ஶிகரங்களிருக்கின்றன.*

**तत्र शृङ्गे प्रतीचीने मत्तवारणसंज्ञिते। महत्यभ्रंलिहे रम्ये स्थितं तदरजस्सरः॥36॥**

*பெரியதாயும் ஆகாயத்தை அளாவியதாயும் ரம்யமாயும் மத்தவாரணமென்று பெயரையுடையதாயும் மேற்கு திக்கிலேயிருப்பதுமான அந்த ஶிகரத்திலே அரஜஸ் என்கிற ஸரஸ்ஸானது இருக்கிறது.*

**तत्रात्रिपुत्रो मगवान् दुर्वासा मुनिसत्तमः। तपश्चचार सुभृशं वर्षाणि सुबहूनि वै ॥37॥**

*அத்ரிபுத்ரராய் தபஸ்வியாய் முநிஶ்ரேஷ்டரான துர்வாஸாவானவர் அந்த அரஜஸ் என்கிற ஸரஸ்ஸின் கரையிலே வெகுஸம்வத்ஸரங்கள் தபஸ் பண்ணிக்கொண்டிருந்தார்.*

**तस्योर्ध्वं गच्छतस्तत्र व्योम्नि विश्वावसोर्मुने। दुर्वाससश्शरीरे च छाया वै निपपात ह ॥38॥**

*வாரீர் நாரதரே! அந்த ஸரஸ்ஸின் கரையிலே தபஸ் பண்ணாநிற்கிற அந்த துர்வாஸாவினுடைய ஶரீரத்திலே ஆகாஶத்தில் ஸஞ்சரியாநிற்கிற விஶ்வாவஸுவினுடைய சாயையானது விழுந்தது.*

**ततः क्रुद्धो महाभागो दुर्वासा मुनिसत्तमः। गन्धर्वराजं गच्छन्तं अपश्यद्व्योम्नि निर्मले ॥**
**तं दृष्ट्वा सुभृशं क्रुद्धो वाक्यमेतदुवाच ह ॥39॥**

*கோபிஷ்டராய்க்கொண்ட மஹாதபஸ்வியும் ருஷிஶ்ரேஷ்ட்டருமான துர்வாஸாவானவர் அந்த சாயாநிபாதத்தினாலே நிர்மலமான ஆகாஶத்திலே ஸஞ்சரிகிற கந்தர்வராஜாவான விஶ்வாவஸுவைப்பார்த்து மிக்க கோபங்கொண்டு வக்ஷ்யமாண ப்ரகாரமாக ஒரு வார்த்தை சொன்னார்.*

**दुर्वासाः – यस्माद्गच्छसि दुर्बुद्धे ममोपरि दिवि द्रुतम्। मामनादृत्य तस्मात्त्वमशरीरो भविष्यसि ॥**
**एवमुक्त्वा रुषाऽपश्यत् निर्दहन्निव चक्षुषा ॥40॥**

*துர்வாஸா சொன்னார்: வாராய் துஷ்டபுத்தியான விஶ்வாவஸுவே! எந்த ஹேதுவினால் என்னுடைய மேலே ஆகாஶத்தில் என்னை லக்ஷ்யம் பண்ணாமல் ஸஞ்சரித்தாயோ, அந்தக் காரணத்தினாலே நீ அஶரீரனாகப் போகிறாய். இந்த ப்ரகாரமாகச் சொல்லி கோபத்தினால் கண்ணாலே தஹிக்குமவர் போல் பார்த்தார்.*

**व्याघ्रजन्मा – एवमुक्ते तु वचने शरीरमपतद्भुवि। तस्य विश्वावसोर्विप्र जगाम सुमहद्भयम् ॥41॥**

*வாரீர் ஶார்தூலரே! துர்வாஸாவினாலே விஶ்வாவஸுவினுடைய ஶரீரமானது பூமியிலே விழுந்தது. அவனுக்கு மஹத்தரமான பயம் உண்டாயிற்று.*

**अशरीरस्ततो गत्वा वायुभूतो मनोजवः। प्रणम्य प्राञ्जलिर्वाक्यं इदमाह धनाधिपम् ॥42॥**

*அதற்குமேல் அந்த விஶ்வாவஸுவானவன் வாயுபூதனாய் அஶரீரனாய்க் கொண்டு மனோவேகத்தை உடைத்தானவனாக அளகாபுரியை அடைந்து பத்தாஞ்ஜலிபுடனாய்க் கொண்டு குபேரனைப்பார்த்து ஒருவார்த்தை சொன்னான்.*

**विश्वावसुः – पश्य देव मम प्राप्तमीदृशं कर्म कुत्सितम्। त्राहि त्राहि धनाध्यक्ष शरणं त्वामुपागतः ॥43॥**

*விஶ்வாவஸு சொன்னான்: வாராய் அளகாதிபதே! என்னால் அடையப்பட்ட இந்த குத்ஸிதமான கர்மத்தைப் பார். ரக்ஷி ரக்ஷி; உன்னை ஶரணமாக அடைந்தேன்.*

**अजानतैव हि मया प्राप्तं कर्मेदृशं प्रभो। दुर्वाससाऽतितपसा समुत्सृष्टं धनाधिप ॥44॥**

*வாரீர் அளகாதிபதியே! அதிக தபஸ்வியான துர்வாஸஸ்ஸினால் ஶபிக்கப்பட்டு குத்ஸிதமான இப்படிப்பட்ட கர்மமானது அபுத்திபூர்வகமாக என்னால் அடையப்பட்டது.*

**तमेवमुक्तवन्तं तु प्रत्युवाच धनाधिपः। सान्त्वयन् श्लक्ष्णया वाचा मागमो मागमो भयम् ॥45॥**

*குபேரனும் இப்படிச் சொல்லும் விஶ்வாவஸுவைப் பார்த்து 'பயப்படாதே பயப்படாதே' என்று வ்யக்தமாக ஒரு வார்த்தை சொன்னான்.*

**अवश्यमनुभोक्तव्यं सुकृतं दुष्कृतं तथा। स्वेनैव स्वकृतं तात नापरस्यापरेण हि ॥46॥**

*வாராய் விஶ்வாவஸுவே! தன்னாலே பண்ணப்பட்ட ஸுக்ருதமும் துஷ்க்ருதமும் தன்னாலேயே அவஶ்யம் அநுபவிக்கத்தக்கது. அந்யனுடைய ஸுக்ருதமும் துஷ்க்ருதமும் அந்யனாலே அவஶ்யமநுபவிக்கத் தக்கதன்று.*

**धर्माधर्मौ सुखं दुःखं लाभालाभौ जयाजयौ। स्वेच्छया नैव जायन्ते प्राणिनां प्राणवत्तम ॥47॥**

*வாராய் புருஷ ஶ்ரேஷ்டனான விஶ்வாவஸுவே! தர்மாதர்மங்களும் ஸுகாஸுகங்களும் லாபாலாபங்களும் ஜயாபஜயங்களும் ப்ராணிகளுக்கு ஸ்வேச்சையினாலே லபியாது.*

**तदत्र त्वं शुचं त्यक्त्वा तरुणीव जरान्वितम्। तपश्चरस्व सुमहद्यथा स्याद्देहसम्भवः ॥48॥**

*'வாராய் விஶ்வாஸுவே! இந்த ஶாப விஷயத்திலே தருணியான ஸ்த்ரீயானவள் வ்ருத்தனை விடுமாப் போலே ஶோகத்தை த்யஜித்து, எப்படி தேஹம் உண்டாகுமோ அப்படிபட்ட தபஸ்ஸைப் பண்ணு' என்று குபேரன் சொன்னான்.*

**एवमुक्तः प्रणम्यैनम् अशरीरो धनाधिपम्। तथेत्युक्त्वा जगामाथ शितिकण्ठं महेश्वरम् ॥49॥**

*இப்படி குபேரனாலே சொல்லப்பட்ட விஶ்வாவஸுவானவன் குபேரனை நமஸ்கரித்து ''அப்படியே தபஸ்ஸு பண்ணுகிறேன்''என்று சொல்லி மஹேஶ்வரனான ஶிவனை அடைந்தான்.*

**वृषभध्वजमासाद्य प्रणम्य प्राञ्जलिस्तदा। पार्वत्या सहितं देवं इदं वचनमब्रवीत् ॥50॥**

*விஶ்வாவஸுவானவன் வ்ருஷபத்வஜனாய் பார்வதியோடே கூடிக்கொண்டிருக்கிற ஶிவனையடைந்து ப்ரணாமம் செய்து பத்தாஞ்ஜலிபுடனாய்க்கொண்டு வக்ஷ்யமாண ப்ரகாரம் ஒரு வார்த்தை சொன்னான்.*

**विश्वावसुः – भगवन्देवदेवेश त्राहि मां शरणागतम्। कुत्राहं तपसस्सिद्धिं सद्यः प्राप्स्यामि शङ्कर ॥**
**तद्वदस्व महादेव त्वस्य मे शरणार्थिनः ॥51॥**

*''த்ரிகாலஜ்ஞராய் தேவஶ்ரேஷ்டருமான மஹாதேவரே! ஶரணாகதனான என்னை ரக்ஷியும். நான் எவ்விடத்திலே தபஸ்ஸித்தியை தத்க்ஷணத்திலே எந்த ஶுபாசரணத்தாலே அடைவேனோ, ஶரணாகதனான இந்த எனக்கு அந்த கார்யத்தைச் சொல்லும்'' என்று விஶ்வாஸு கேட்டான்.*

**व्याघ्रजन्मा – एवमुक्ते तु वचने नीलकण्ठोऽब्रवीदिदम् ॥52॥**

*வ்யாக்ரஜந்மா சொன்னார்: இப்படி விஶ்வாவஸு சொல்லச் செய்தே சிவன் ஒரு வார்த்தை சொன்னான்.*

**रुद्रः – तुलसीकाननं तात गन्तुमर्हसि सुव्रत। यत्र कैरविणी नाम सरसी सा महत्तरा ॥**
**तत्र सिद्धिस्तव भवेत्सद्य एव महातपः ॥53॥**

*ருத்ரன் சொன்னார்: வாராய் நல்ல வ்ரதத்தை உடைய விஶ்வாஸுவே! நீ எவ்விடத்திலே கைரவிணீஎன்கிறமஹாஸரஸ்ஸானது இருக்கிறதோ, அதன்கரையிலேயிருக்கிறப்ருந்தாவனத்தைச் சேரும் பொருட்டு அர்ஹனாயிருக்கிறாய். அந்த ப்ருந்தாவனத்திலே உனக்கு தபஸ்ஸித்தியானது உண்டாகும்; தத்க்ஷணத்திலே மஹாதபஸ்வியாயும் ஆவாய்.*

**व्याघ्रजन्मा– एवमुक्तस्तु देवेन हृष्टो विश्वावसुस्तदा। तुलसीकाननं शीघ्रमाजगाम महामतिः ॥54॥**

*வ்யாக்ரஜந்மா சொன்னார்: அப்போது மஹாமதியான விஶ்வாவஸுவானவன் ருத்ரனாலே இப்படி சொல்லப்பட்டவனாய்க்கொண்டு ஸந்துஷ்டனாய் ப்ருந்தாவனத்தை ஶீக்ரமாக அடைந்தான்.*

ஏறக்குறைய - (தே), முன்பின்னாக

ஏறக்கொலோ - (தே), ஆவேசித்தானாக வேணும் (கடல் ஞானத்து ஈசன் வந்தேறக்கொலோ திருவா.5-6-1).

ஏறக்கொழிக்கை - (தே), மேலே தள்ளுகை.

ஏறப்பறக்கும் - (தே), மேலே வ்யாபரிக்கும்

ஏறப்போகை - (தே), சேரப்போகை

ஏறல் - (தே), ஏறுதல்

ஏறவிட்டு - (தே), சேரவிட்டு

ஏறன் - (தே), ருஷப வாகனமுடைய ருத்ரன் (ஏறனைப்பூவனை திருவாய்.2-2-3).

ஏறாத - (தே), . இடாத 2. சேராத 3. உயர ஏறாத

ஏறாமேடு - (தே), நீர் ஏறிப்பாயாத மேடு

ஏறாளர், ஏறாழவர் - (தே), படை வீரர்.

ஏறி - (தே), மேலே ஏறி

ஏறிக்கொழிக்க - (தே), மேலே தள்ள

ஏறிட்டுக் கொள்ளுகை- (தே), ஒன்றைத்தன்மேலே ஆரோபித்துக் கொள்ளுகை

ஏறிட்டுப்பார்க்கை - (தே), உற்றுப்பார்க்கை

ஏறிடுதல் - (தே), 1. அடைதல் 2. ஏறவிடுதல்

ஏறிமறிந்த - (தே), சாந்தமான

ஏறின ப்ரயோஜனம் - (தே), பலித்த ப்ரயோஜனம்

ஏறினேன் - (தே), அதிகரித்தேன்

ஏறு - (தே), 1. வ்ருஷபம் 2. எருமை 3.இடி 4.கவரிமான் 5. சங்கு 6. பன்றி 7. தழும்பு 8. ப்ரஸித்தி 9. யோகம் 10. பசு 11. சிரேஷ்டன் 12. ஸிம்ஹம்

ஏறுகை - (தே), 1. ஏறி வருகை 2. தோற்றுகை 3. போகை 4. முடிக்கை.

ஏறுதல் - (தே), 1. தோற்றுதல் 2. அதிகப்படுதல் 3.இவர்தல் 4.உயருதல் 5. மேலே போதல்

ஏறுமேறு - (தே), ருஷபத்தின் மேலே ஏறுபவனான ருத்ரன்

ஏறெடுத்தல் - (தே), 1. உயர்த்துதல் 2. மேலெடுத்தல்.

ஏறேல் - (தே), ப்ரவேசிக்க வேண்டா (கழகமேறேல் நம்பி திருவா.6-2-6).

ஏற்க - (தே), 1. இணங்க 2. உவப்பாக 3. முன்

ஏற்கனவே, ஏற்கெனவே-(தே), முன்னமே

ஏற்குதல் - (தே), 1. இணங்குதல் 2. இரத்தல் 3. ஒப்புக் கொள்ளல் 4. வாங்கல்

ஏற்படுதல் - (தே), உடன்படுதல்

ஏற்பனவாயின - (தே), தங்களுக்கு அநுரூபங்களான (ஏற்பனவாயின கொண்டு திருப்பள்ளி.7).

ஏற்பாடு - (தே), 1. உடன்பாடு 2. நியமம் 3. பொருத்தம்

ஏற்ப - (தே), 1. இரப்பு 2. ஈர்ப்பு 3. பொருத்தம்

ஏற்ற - (தே), 1. தகுதியான 2. பக்வமான

ஏற்ற கலங்கள் - (தே), இட்ட பாத்ரங்கள்

ஏற்றக்குறைச்சல் - (தே), ஏற்றத்தாழ்ச்சி.

ஏற்றது - (தே), 1. இயன்றது 2. பொருந்தினது

ஏற்றம் - (தே), 1. அதிகம் 2. உயர்ச்சி 3. எழும்புதல் 4.கீர்த்தி 5.மேன்மை 6. துலா

ஏற்றம்வற்றம் - (தே), பெருக்கும் குறைவும்.
ஏற்றரும் வைகுந்தம் - (தே), (ஸ்வயத்னத்தால்) அடைய முடியாததான ஸ்ரீவைகுண்டம்.
ஏற்றல் - (தே), 1. அடுக்குதல் 2. கொள்ளல் 3.இணங்கல் 4.இரத்தல் 5. உணர்த்தல் 6.எதிர்த்தல் 7.எழும்புதல் 8.எறிதல் 9.ஏற்றுதல் 10.தகுதி.
ஏற்றான் - (தே), ருஷப வாகனமுடைய ருத்ரன். (ஏற்றான் புள்ளூர்ந்தான் முதல் திருவ.74).
ஏற்றி - (தே), உண்டாக்கி
ஏற்றிலக்கை (தே), தின சம்பளம்
ஏற்றுக்கொள்ளுதல் - (தே), பெற்றுக்கொள்ளுதல்
ஏற்றுதல் - (தே), 1.அதிகப்படுத்தல் 2.உயரப்பண்ணுதல் 3.ஏறப் பண்ணுதல்
ஏனம் - (தே), 1.வராகம் 2. தப்பிதம் 3. பாபம் 4. மான்
ஏனை - (தே), 1. என்னை 2.ஒழிந்த 3.மற்று
ஏனோ - (தே), எதுக்கோ
ஏனோர் - (தே), சத்ருக்கள்
ஏன் - (தே), என்னை
ஏன்றிக்கொள்ளுதல் - (தே), ஏறிட்டுக்கொள்ளுதல்
ஏன்று - (தே), உத்யோகித்து
ஏன்றுகை - (தே), பொருந்துகை
ஏன்றுகொண்டு - (தே), ஏறிட்டுக்கொண்டு 2.தரித்துக்கொண்டு 3. இயன்று கொண்டு.
ஏன்றேன் - (தே), 1. பொருந்தினேன் 2. ஏறிட்டுக் கொண்டேன் (ஏன்றேனடிமை நான்மு.திரு.78).

ஐ - (ஸம்), அச்செழுத்துக்களில் பத்தாவது வர்ணம். (இது தீர்க்காதி பேதேன பன்னிரண்டு விதமுடையது). 1.அழைத்தல் 2. நினைத்தல். (தே), 1.அரசன் 2. அழகு 3. ஸௌக்ஷமதை 4.கடவுள் 5.குரு 6. ஓர் அவ்யயம் 7. பிதா 7.ச்லேஷ்மம் (ஐயார் கண்டமடைக்கிலும் திருவாய்.2-9-3).
ஐகாந்திக: - (ஸம்),பரப்ரஹ்மம் ஒன்றிலுமே ஆஸக்தியுடையவன்.
ஐக்யம் - (ஸம்), ஒற்றுமை
ஐங்கணையன், ஐங்கணைவில்லி - (தே), பஞ்சபாணங்களையுடைய மன்மதன்.
ஐங்கரன் - (தே), கணபதி
ஐங்கருவி - (தே), பஞ்சேந்த்ரியங்கள்
ஐச்சிகம் - (ஸம்), இச்சையினால் உண்டானது.
ஐஞ்னூறு - (தே), ஓர் எண்ணிக்கை. அதாவது ஐந்து நூறு.
ஐணம், ஐணேயம் - (ஸம்), க்ருஷ்ணாஜினம்
ஐதாய் - (தே), அல்பமாய்
ஐதிஹ்யம் - (தே), ஆசார்ய உபதேச பரம்பராப்ராப்தமான அர்த்த விசேஷங்கள்.
ஐது - (தே), அல்பம்.
ஐதிநொய்து - (தே), அத்யல்பம்
ஐந்தரம் - (தே), 1. அழகுள்ளது 2. நெருக்க
ஐந்தருக்கள் - (தே), பஞ்ச கல்பவ்ருக்ஷங்கள் (மந்தாரம், பாரிஜாதம் கல்பவ்ருக்ஷம், ஹரிசந்தனம், ஸந்தானம் என்கிறவை).